வருட சந்தா.

1 வருஷத்திற்கு 6—0—0
மலேயா 11—0—0

ஆஸாத்

ஆசிரியர்கள்:-
ஹகீம் சகோதரர்கள்.

—(தமிழ் தேசிய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.)— விலை 2 அ[ணா]

மலர் 1. ஹிஜ்ரீ 1367-ளு ரபீ அவ்வல்-மீ 14உ (26—1—48) திங்கள்கிழமை இதழ்

புனர் வாழ்க்கை.

—(o)—

முஸ்லிம்கள் ஸ்பெயினில் அழிந்த சரித்திரத்தை படித்து வந்த நாம் இன்று இந்தியாவில அழிவை நோக்கி ஓடிக் கொண்டிருக்கும் முஸ்லிம்களை நேரில் பார்க்கின்றோம். சிறப்புடன் கவுரவமாக வாழ்ந்தவர்கள் நிலை தவறி, சிதறுண்டு, அழியும் தருவாயில் இருப்பதைக் காண்கின்றோம். ஏறக்குறைய தொளாயிரம் வருஷங்கள் வரை இந்தியாவில் கம்பீரமாக ஆட்சி செலுத்திய சமூகக் கட்டடம் தகர்ந்து கொண்டிருக்கிறது. பன்முறை எச்சரித்தும் பலனில்லை. இன்றைய நெருக்கடியான கட்டத்தில் பரிகாரத்தை விட பிரார்த்தனையே அதிக பலனளிக்க முடியும் என்பது நம் முடிவு.

சமூக அழிவின் அறிகுறிகள்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அவையனைத்தும் இன்று முஸ்லிம்களிடம் தென்படுகின்றன. அதாவது குழப்பம், அவநம்பிக்கை, பீதி, சோர்வு, ஏமாற்றம் முதலியன. ஏகப் பிரதிநிதித்வ ஸ்தாபனம் போன இடம் தெரியவில்லை. நட்டாற்றில் திண்டாடவிட்டு பாகிஸ்தானுக்கு தலைவர்கள் ஓடுகின்றனர். ஒருவருக்கும் நிம்மதியில்லை. தன்னைத்தவிர மற்றவர்களைப் பற்றி அக்கரை கிடையாது. கட்டுப்பாடு தகர்ந்தது. தலைவர்களைக்காணோம். அலங்கோலமாய் காட்சியளிக்கும் இவர்கள்தான் நேற்றுவரை வான் அதிரக் கோஷித்தவர்களா! சுக்கு நூறாக சிதறித்தவிக்கும் இவர்கள் தான் நேற்று முன்தினம்வரை அசைக்கமுடியாத தங்கள் கட்டுக் கோப்பைக் குறித்து பெருமையடித்துக்கொண்டவர்களா! இது எதிர்பார்த்த நிலைமைதான், ஆச்சரியப்படுவதற்கு இதில் ஒன்றுமில்லை.

வினைப் பயன்.

பத்து வருஷங்களாக முஸ்லிம்கள் கையாண்ட முறைகளுக்கும், மத உணர்ச்சியை தவறான வழியில் திருப்பிவிட்ட அவர்களுடைய செயலைக்கும் இன்றைய நிலைமை பிரத்தியட்ச பலனேயாகும். மத அடிப்படையில் நடந்த பிரிவினையின் தவிர்க்க முடியாத விளைவுகள் இவை. முட்களைவிதைத்து மலரிதழ்கள் எதிர்பார்க்க முடியுமா?

இரண்டு சமுதாய அடிப்படையில் நாடு [பிரிக்கப்]பட்டது. ஹிந்துக்கள் எதிரிகள் என்று குற்றம் [சாட்டிய]வர்கள் அவர்களிடமிருந்து எதிர்ப்பைத் தவிர [வேறு] என்ன எதிர்பார்க்க முடியும்? நேரடி நடவடிக்[கை], நவகாலி, கல்கத்தாநாடகங்கள் நடத்தப்பட்ட[ன]. பீஹாரில் கூடுதலாகவே பதில் கொடுக்கப்பட்ட[து]... வைப் பார்க்கமுடியாத நகர் ஒன்று அமைக்க[ப்பட்டது] என்றால் முஸ்லிம் காணக்கிடைக்காத நகரமும் [அமைக்]கப்பட்டுவிட்டது. லாஹூரும்,டில்லியும் இதற்கு [உதாரண]மாகும். கிழக்கு மேற்கு பாஞ்சால மாகாணங்[கள்] அடிப்படையில் அமைக்கப்பட்டு வருகின்றன. பா[கிஸ்தா]னில் நடப்பது இந்தியாவில் திருப்பிக்கொடுக்கப்படு[கிறது]. குறைவுமில்லை. கூடுதலுமில்லை. குறை கூற நமக்கு உரிமை ஏது?

நாம் இருப்பதே இடைஞ்சல்.

நாம் வாங்கிக்கொடுத்த பாகிஸ்தான் முஸ்லிம்களுக்கு நம்மைப்பற்றி இம்மியும் கவலையில்லை. இருந்திருந்தால் ஒரு ஹிந்துவோ, சீக்கியனோ வெளியேற அவசியம் ஏற்படாத வகையில் நேர்மையுடன் அவர்கள் நடந்திருக்கவேண்டு[ம்]. சோகக்கதைகளுடன், துன்புற்ற ஹிந்து, சீக்கியர்கள் இந்தியாவடைந்தால் இங்குள்ள ஏழை முஸ்லிம்களின் கதி என்ன ஆகுமென்று அவர்கள் கவலைப்படவேயில்லை கவலைபடப்போவதுமில்லை. இனிநாம் அவர்களுக்கு தேவையில்லை. அவர்கள். நம்மை இடைஞ்சலாகவும் கருதலாம். விழிப்படைந்துவிட்டால் ஆதரித்ததைக்காட்டிலும் ஆயிரம் மடங்கு அதிகமான ஆவேசத்துடன் எதிர்த்து ஐக்கிய இந்திய கோஷங்களால் இந்திய முஸல்மான்கள் பாகிஸ்தானை

...தவிடுபொடியாக்கி விடுவர் என்ற பீதி அவர்களுக்கு இருப்பது இயற்கையே,

அந்தரங்க சுத்தியுடன் காயிதே ஆஜம் முயற்சித்திருந்தால் கலகங்கள் பரவியிருக்குமா? அவர் கலவரப் பிரதேசங்களுக்கு செய்தவிஜயங்கள் எத்தனை? பேசிய கூட்டங்கள் எத்தனை? விடுத்த வேண்டுகோள்கள் எத்தனை? ஒன்று ...ட இல்லை.

...ப்படியே ஒருக்கால் பேச விரும்பினாலும் பாவம்! ...ால் என்னதான் பேசமுடியும். "ஹிந்து, முஸ்லிம் ...ிய நீங்கள் அனைவரும் சகோதரர்கள். சேர்ந்து ...ங்கள். சேர்ந்தே வாழ்ந்துவருகின்றீர்கள். ஒன்று ...கள் ஒன்றாகவே இருந்தாகவேண்டும். பரஸ்பர ...க்கையுடனும் நல்லெண்ணத்துடனும் ஒற்றுமையுடன் ...னேறுங்கள்." என்று அவர் வாய்விட்டுத்தான் சொல்ல முடியுமா? அப்படி சொல்லுவதால் இரண்டு சமுதாயக் கொள்கை பஞ்சாய் பறந்துபோகாதா? பிறகு காயிதே ஆஜமுக்கே ஆட்டங் கண்டுவிடாதா? அவர் என்ன செய்வார் பாவம்! ஹிந்துக்களும், முஸ்லிம்களும் சகோதரர்களாய் மீண்டும் ஒருவரையொருவர் ஆலிங்கனம் செ...துகொள்ளும் நன்னாளுக்குப்பிறகு பாகிஸ்தானு ...ிதே ஆஜமும் இருக்க முடியாது. மிஸ்டர் ... இது நன்றாய் தெரியும். எனவே வெற்றியை ... வகுப்புவாதக்கட்டாரி, இருசமுதாயக்கோடரி ...்தீ, துவேஷ விஷப்புகை போன்ற ஆயுதங்களை ...வர் எப்படி சம்மதிப்பார்.

...ா காந்தி, பண்டித ஜவாஹர்லால் நேரு, பண் ...த வல்லப பந்து முதலியோரும் மத்திய சர்க் ...ரங்களைத்தடுக்க எடுத்துக்கொண்ட நடவடிக் ... மிஸ்டர் ஜின்னாவின் முயற்சியை ஒப்பிட்டுச் ...முடியுமா? இவ்வளவும் செய்ய காயிதே ஆஜம் ...ில்லை என்பது யோசனைக்குறிய விஷயமாகும்.

பாகிஸ்தான் நீடிக்க கலகம் அவசியம்

இந்தியர்கள் இதுவரை உணராமல் இருந்தால் இனியாகிலும் மிஸ்டர் ஜின்னா ஒரு கலகத் தலைவர் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டியதவசியம். கலகங்களை தூண்டிக்கொண்டிருப்பதே அவருடைய நோக்கம். பதினான்கு வருஷங்களாக மகாத்மா காந்தி, பாபு ராஜேந்திர பிரசாத், ச...ர்த்தி இராஜகோபாலாசாரியார் செய்த சமரஸமுயற்...களை அனைத்...தையும் மிஸ்டர் ஜின்னாவியர்த்தமாக்கியுள்ளார். காங்கிரஸ் அக்கிராசனர் என்ற முறையில் மௌலானா அபுல் கலாம் ஆஸாத் சமரஸத்திற்கு முயன்றபோது அவருக்கு "ஷோபாய்" பட்டத்தை வழங்கினர். 1944-ல் நடந்த காந்தி, ஜின்னா பேச்சுவார்த்தையின்போது இன்று அடைந்துள்ள பாகிஸ்தானின் திட்டத்தையே மஹாத்மா காந்தி மிஸ்டர் ஜின்னாவிடம் அன்றே சமர்ப்பித்தார். அன்று ...தற்குச்சம்மதிக்காமல் மூன்று வருஷங்கள்மிஸ்டர் ஜின்னாவன் கடத்தினர்? என்பதுதான் கேள்வி இதேதிட்டத்தை அன்றே ஏற்றுக்கொண்டிருந்தால் இத்தனை கலக்கங்கள் நடந்திருக்கமுடியாதல்லவா? ரத்தமின்றி வரண்டுபோன ரத்தக்குழாய்களைக் கொண்ட ஏழைகளின் ரத்தமும், இந்தியத்தாய்மார்களின் கண்ணீரும் சிந்த சந்தர்ப்பமில்லாமல் போயிருக்குமல்லவா? மிஸ்டர் ஜின்னாவுக்கு அது பிடிக்கவில்லை.

பிரிவினைக்குப்பிறகு கலவரங்கள் அடங்கிவிடும் என்று நம்பியே காங்கிரஸ் பாகிஸ்தானுக்கு இணங்கிற்று. இதனால் ஹிந்து முஸ்லிம் பிரச்னை தீர வழி உண்டாகும் என்று காங்கிரஸ் நினைத்தது இயற்கையேயாகும். ஆனால் பிரிவினைக்குப்பிறகும் கலகங்கள் ஓய்வதற்குபதில் பன்மடங்கு அதிகரித்தன. அமைதி ஏற்பட்ட பிறகு இந்திய முஸ்லிம்கள் நிதான புத்தியுடன் தங்கள் தவறை உணர்ந்து மீண்டும் இந்திய ஐக்கியத்தில் கவனம் செலுத்துவரென்பது நிச்சயம். இதனால் மிஸ்டர் ஜின்னாவின் அரசியல் வாழ்வு மாண்டு மடிந்துபோக நேரிடும். எனவே மிஸ்டர் ஜின்னா கோஷ்டியார் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையை சகித்துக் கொண்டிருக்க முடியாது

எட்டு நீண்ட வருஷங்கள் பாகிஸ்தான் ஜிந்தாபாத் என்று தொண்டைகிழியகோஷித்து துன்பப்பட்ட இந்திய முஸ்லிம்களுக்கு பாகிஸ்தான் கிடைத்ததும் பன்மடங்கு துன்பங்கள் அதிகரித்துவிட்டன. மிஸ்டர் ஜின்னாவின் நடவடிக்கைகளை கவனித்தால் இந்தியாவில் முஸ்லிம்களை இருக்கவிடவே மாட்டார்போலத் தெரியவருகிறது இந்நிலையில் இன்னும் எத்தனை வருஷங்கள் வரை பரிவர்த்தனை கொடுமைகள் இந்திய முஸல்மான்கள் சகிக்கவேண்டியிருக்கும் என்று முன்கூட்டி சொல்லிவிட முடியாது. அத்துடன் நின்றுவிடுமா! பிறகு இந்திய, பாகிஸ்தான் யுத்தக்கொடுமைகள் இனி நிம்மதியாக வாழலாம் என்ற நம்பிக்கையே மறைந்து வருகின்றது. பாகிஸ்தானின் விபரீதப் போக்கைப் பார்த்தால் மிஸ்டர் ஜின்னா இரண்டு நாடுகளுக்கிடையே சண்டைமூட்டியே தீருவார் என்று எண்ண இடமேற்படுகிற .

இந்திய முஸல்மான்களைப்பற்றி மிஸ்டர் ஜின்னாவுக்கு கவலையிருப்பதாக நினைப்பது பைத்தியக்காரத்தனமான நம்பிக்கையாகும். பீஹார்கலவரங்களின்போது மிஸ்டர்ஜின்னாவின் வீட்டில் பிரபலலீகர்கள் கூடி இரவெல்லாம் டெலிபோன் மூலம் கிடைக்கும் செய்திகளை ஆவலுடன்கேட்டுக்கொண்டே இருந்தனர். முஸ்லிம்கள் கொல்லப்படும் செய்திகள் கிடைக்கும்போதெல்லாம் அவர்கள் சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள் என்று நேரில் கண்டவர்கள் பலர் சொல்லுகின்றார்கள். பீஹார் சம்பவங்கள் பாகிஸ்தான் கோரிக்கையின் நியாயத்தை வற்புறுத்தக்கூடியவை என்பது அவர்களுடைய முடிவு.

பீஹாரிலிருந்து கிடைத்த தகவல்களைச் சேகரித்துக் கொண்டு மிஸ்டர் ஜின்னா லண்டனுக்கு சர்ச்சிலிடம் புறப்

பட்டார். பீஹார்முஸ்லிம்களின் கண்ணீரை துடைக்க பீஹாருக்குப் போகவில்லை. பீஹாருக்குப் போகும்படி கேட்டவர்களுக்கு "பீஹார் போவதால் பிரயோஜனம் ஒன்றுமில்லை, நான் சில்லிட்டுப்போன ரத்தஓட்டமுள்ள ஒரு அரசியல் வாதி" என்று பதிலளித்துவிட்டார். ஆனால் தன்னைக் கொல்ல முயற்சித்தபோது தனக்கு ஏற்பட்ட ஒரு சிறு கத்தியின் லேசான உராய்தலுக்கு அவர் பதினெட்டு முறை பம்பாய் மாகாண பிரதம மாஜிஸ்திரேட்டு கோர்ட்டில் ஆஜரானார்! அச்சமயம் அவருடைய ரத்தம் சில்லிட்டுப்போகாமல் இருந்தது அதிசயமல்லவா!

நான்கு கோடி இந்திய முஸல்மான்கள் இந்திய யூனியனுடன் சேர்வதை மிஸ்டர் ஜின்னா விரும்ப முடியாது. இதனால் இந்தியா பலப்படுவதுடன் ஹிந்து, முஸ்லிம் ஒற்றுமைக்குப் பிறகு மிஸ்டர் ஜின்னாவின் கபட நாடகங்களின் உண்மையும் விளங்கிவிடும். அப்பொழுது "காயிதே ஆஜம் ஜிந்தாபாத்" என்று கோஷித்த அதே முஸ்லிம்கள் "மிஸ்டர் ஜின்னா ஒழிக" என்று கோஷிப்பார்கள்.! ஆகையால் அவர் ஹிந்து.முஸ்லிம்களைமூட்டிவிடவே முயற்சிப்பார் என்பது நிச்சயம்.

நாசம் மூன்று தலைமுறைக்கு

டில்லிக்கு வந்திருந்தசமயத்தில் நவாப் ஜாடாலியாகத் அலிகான் முஸ்லிம் அகதிமுகாம் ஒன்றுக்கு (பழயகோட்டை) விஜயம்செய்தார். அவரைக்கண்டவுடன் ஆவேசத்துடன் வாயில் வந்தபடி திட்டிக்கொண்டு முஸ்லிம்கள் அவரை தாக்க முயற்சித்தார்கள். அவரை தடுத்து நிறுத்திய முஸ்லிம் கிழவர் ஒருவர் நவாப் ஜாடாவை நோக்கி "நாம் உங்களை திட்ட விரும்பவில்லை. இஸ்லாமில் திட்டுவதற்கு அனுமதியில்லை உங்களை ஆண்டவனிடம் ஒப்படைக்கிறோம். அவரே உங்களை நன்றாக அறிவார். ஆனால் நீங்கள் எங்களுடைய மூன்று தலைமுறைகளை நாசம்செய்திருக்கின்றீர்கள்" என்று சொல்லிப் பெருமூச்சு விட்ட அந்த விருத்தாப்பியர் பக்கத்தில் நின்றிருந்த மகனையும், பேரனையும் சுட்டிக்காட்டினார்.

இந்திய முஸல்மான்களின் வசைபுராணம் ஆரம்பமாய் விட்டதை உணர்ந்த மிஸ்டர் ஜின்னா பெரியபுதிர் ஒன்றைப் போட்டார். இந்திய விவகாரத்தில் தலையிட்டு தீர்த்து வைக்கும்படி ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தைக்கோறினார் இதைக் கேட்டதும் ஏழை இந்திய முஸல்மான்களுக்கு ஒருவித ஊக்கம் பிறந்ததுடன் இனி ஹிந்துக்களின் ஆதிக்கம் நிலைக்கமுடியாது. வெள்ளையன் திரும்ப வந்துவிடுவான் என்றும் நம்பலாயினர். இன்னொருபுரம் ஹிந்துக்களின் கோபம் பொங்கியெழுந்தது. ஓய்ந்திருந்த கலகங்கள் மீண்டும் புத்துயிர் பெற்றுவிட்டன. மிஸ்டர் ஜின்னாவின் தந்திரம் மகாத்மா காந்தி, பண்டிதநேரு முதலியோரின் சமாதான முயற்சிகளை பலனற்றதாக்கி விட்டது.

இங்கு செய்யப்படும் சமாதான முயற்[சிக]ளை எல்லாம் தகர்க்கும் வேலையில் மிஸ்டர் ஜின்னா முனைந்திருக்கிறார், இந்த நாடு பொசுங்கி சாம்பலாக குவிந்துபோவதாக இருப்பினும் வெள்ளையன் திரும்பவும் இங்கு ஆதிக்கம் செலுத்துவதற்கு எந்த ஒரு ஹிந்துவும் சம்மதிக்கமாட்டான் என்று அவருக்கு நன்றாய்த்தெரியும். இருந்தாலும் ஹிந்துக்களுக்கு ஆத்திரமூட்டும் ஒரே நோக்கத்துடன் இம்மாதிரியான புதிர்களைப் போட்டுவருகிறார் மிஸ்டர் ஜின்னா.

முஸ்லிம்களை லீக்கிலிருந்து விலக்கி காங்கிரஸில் சேர்க்கும்வேலையில் நாம்வெற்றி அடைந்துவிட்டாலும் நொடிப்பொழுதில் மிஸ்டர் ஜின்னா அதை தகர்த்துவிட முடியும் பாகிஸ்தானில் ஆயிரம் ஹிந்துக்கள் கொலையுறும்படி செ[ய்]வதுடன் அதன் ரிபோர்ட்டையும் பத்திரிகைகளுக்கு அனுப்பிவைப்பார் இந்தியாவில் அது எதிரொலிக்கும் இங்குள்ள ஹிந்துக்கள் முஸ்லிம்களைக் கொல்ல ஆரம்பித்துவிடுவர். பாடுபட்டு நிலைநாட்டிய ஒற்றுமை மறைந்து சூழ்நிலையே விஷ மயமாகிவிடும். இது ஹிட்லரின் ஆயுதம். ஹிட்லரின் அடிச்சுவட்டைப் பின்பற்றியே மிஸ்டர் ஜின்னாவும் காரியங்களைச்செய்கின்றார்.

பாகிஸ்தான் போக்கைப்பார்த்தால் யுத்தத்தை தவிர்க்க முடியாது என்று எண்ண இடமிருக்கின்றது. ... காலத்தில் மிஸ்டர் ஜின்னாவின் இந்தக்கைவரிசை ... பலன் தாக்கக்கதாய் இருக்கமுடியும் இந்திய, பாகி... போர்முனையில் இந்திய முஸல்மான்கள் பூரண விசு... ளாய் பாகிஸ்தானை எதிர்த்து அணிவகுத்துநிற்கும் ... சமயத்தில் மிஸ்டர் ஜின்னா பதினாயிரம் ஹிந்துக்க... செய்வார். பதிலுக்கு ஹிந்துக்களும் முஸ்லிம்க... செய்ய ஆரம்பிக்கலாம். இதனால் பாகிஸ்தானை சி... ஒன்றுபட்டு அணிவகுத்துநிற்கும் ஹிந்து, முஸ்... யில் குழப்பம் ஏற்பட்டுவிட்டால் மிஸ்டர் ஜின்... காரியம் சித்தியாகமுடியும்.

முஸ்லிம் நாடுகளின் சமஷ்டி ஒன்றை பாகிஸ்தான் ஏற்படுத்தப் போவதாக சில உர்து பத்திரிகைகளில் ஒரு செய்தி வெளியாயிற்று அஃதாவது இஸ்லாமுக்கும், ஹிந்து தர்மத்திற்கும் சிலுவை யுத்தம்போன்றதொரு யுத்தம் நடக்கப்போகிறதாம் இந்தியாவில் முஸ்லிம்கள் இருக்கவே முடியாமல் செய்வது ஒன்றே இம்மாதிரியான செய்திகள் வெளிவருவதின் நோக்கமாகும் இதனால் ஹிந்துக்களுக்கு கோபம் அதிகரிக்கச்செய்யும் முஸ்லிம்களுக்கோ பீதியே அதிகரிக்கமுடியும்

மகாத்மா காந்தி அரும் பாடுபட்டு அணைத்த கலவரத்தீயை மீண்டும் தூண்டிவிட இம்மாதம் 5-தேதி கராச்சியில் சீக்கியர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். பாகிஸ்தான் லீடர்கள் அமைதியை சகித்துக்கொண்டிருக்க மாட்டார்கள் என்பதற்கு இந்த சம்பவம் ஒன்றே போதிய அத்தாக்ஷியாகும்.

...ல்தர காங்கிரஸ் விரோதி

காங்கிரஸின் முதல்தர எதிரி மிஸ்டர் ஜின்னாதான், மகாத்மா காந்தி, பண்டிதநேரு முதலியோரின் செல்வாக்கைக் குறைத்து காங்கிரஸை பலஹீனப்படுத்துவதே அவருடைய நோக்கம். பாகிஸ்தானிலுள்ள ஹிந்துக்கள் கொலை செய்யப்பட்டால் அது இந்தியாவில் எதிரொலிக்கத்தான் செய்யும். இங்குள்ள முஸ்லிம்களை கொல்ல முயற்சிக்கும் ஹிந்துக்களை வன்மையாகக்கண்டிப்பதுடன் அவசியமானால் சுட்டுத்தள்ள சொல்லவும் காங்கிரஸ் தலைவர்...ள் தயங்கமாட்டார்கள். இதனால் இயற்கையாக ஹிந்...க்களுக்கு காங்கிரஸினிடம் வெறுப்புஉண்டாகலாம் காங்...ரஸ் பலஹீனப்பட்டால் இந்தியாவின் அரசியல் சக்தி ...ன்றிப்போகாமல் இருக்க முடியாது. இதனால் இந்திய ...ஸல்மான்கள் பாதிக்கப்படுவார்கள் என்பது உண்மை...ான் ஆயினும் இந்தப் பகடைக்காய்கள் வெட்டித்தள்ளப்படுவதைப்பற்றி அவருக்கு அக்கறை இல்லை. லக்ஷியம் கைகூடினால் அதுவே மிஸ்டர் ஜின்னாவுக்கு திருப்தியளிக்க முடியும். இந்திய முஸ்லிம்களை பலிக்கடாவாக உபயோகித்து ஒரே கல்லில் இரண்டு குருவிகளை வீழ்த்துவதுதான் அவருடையநோக்கம் இது புண்ணியவானின் பழைய கைவரிசையாகும்.

...ார் கலவரங்களுக்குப் பிறகு மிஸ்டர் ஜின்னா எல்... தேர்தலில் வெற்றிபெற்றார். பீஹாரைச் சேர்ந்த ...ர்கள் கொலையுண்ட முஸ்லிம்களின் மண்டை...களுடன் எல்லைப்புரத்திற்குச் சென்று பட்டாணியர் ...ங்கிரஸிற்கு எதிராக தூண்டினார்கள். கொலை...றார் முஸ்லிம்களை தக்க சமயத்தில் மிஸ்டர்ஜின்னா ...னப்படுத்திக் கொண்டார். ஆத்திரம் மூட்டப்...டாணியர்கள் பதில்நடவடிக்கை எடுத்தால் அங்...து, சீக்கிய சிறுபான்மையோருக்கு ஏற்படக்...ஆபத்தை அந்த அறிவிலிகள் உணரவில்லை அப்... நடந்தேறியும் விட்டது. மண்டையோடுகளுடன் ...லைப்புரத்திற்குச் சென்ற அதே ஆஸாமிகள் இன்று ஐக்கிய மாகாண, பீஹார் சர்க்கார்களிடம்சீக்கிய அகதிகள் பேரில் குறை சொல்லிக்கொண்டு இருக்கின்றனர். நாம் நேர்மையுடன் நடக்காதவரையில் பிறரிடமிருந்து நேர்மையை எதிர்பார்ப்பது முட்டாள்தனமாகும். ஆனால் மிஸ்டர் ஜின்னாவின் விஷயமே வேறு. கலகங்கள் நடந்துகொண்டிருக்கும் வரைதான் அவர் தலைவராய் இருக்க முடியும்.

...வறை உணர்வதே திருத்தம்.

கலகங்களுக்கெல்லாம் முஸ்லிம்களே காரணம் என்று நாம் குற்றம் சாட்டுவது சிலருக்கு பிடிக்காமல் இருக்கலாம். ஆனாலும் கலகங்களுக்கெல்லாம் பிரிவினைதான் காரணம் என்பதை அவர்களால் மறுக்க முடியாது. இருதரப்பாரும் திருப்தியடையும் விதத்தில் குற்றச்சாட்டுகளை இருசாரார் பேரிலும் சுமத்தி மெருகு கொடுத்து எழுத நமக்குத்தெரியாது. தெரியவேண்டிய அவசியமும் நமக்கு இல்லை. கிழக்கு, மேற்கு இரண்டு பஞ்சாப் மாகாணங்களையும் சட்டரீதியாக தராசுமுனையில் கண்டித்து காங்கிரஸ், லீக், இரண்டையும் ஏககாலத்தில் குறைகூறி மழுப்பிக்கொண்டிருக்க நாம் அவ்வளவு பெரிய லீடர் அல்ல தலைமைக்கு ஆபத்து வந்துவிட்டால் என்ன செய்வது என்ற பயமும் நமக்கு இல்லை. பத்திரிகை அதிகமாக விற்பனை ஆகவேண்டுமென்ற ஆசையோ அளந்து எடைபோட்டு பேசவேண்டும் என்ற சட்டசபைக் கட்டுப்பாடோ நமக்கு கிடையாது. உண்மை என்று நாம் கண்டதைத் தயங்காமல் சொல்லியே தீருவோம். மிஸ்டர் ஜின்னா கோஷ்டியின் துவேஷப்பிரசாரமும், இரண்டு சமுதாய அடிப்படையில் நடந்த பிரிவினையுமே கலகங்களுக்கு எல்லாம்காரணம் என்பது நம் மறுக்கமுடியாத குற்றச்சாட்டு

ஹிந்துக்களும் சளைக்கவில்லை.

கொலை கொள்ளை, பொசுக்கல், காட்டுமிராண்டித்தனம், கற்பழித்தல், சிசுஹத்தி போன்ற மிருகத்தனமான செய்கைகளில் ஹிந்துக்களும் முஸ்லிம்களைவிட சளைத்துவிடவில்லை. என்று நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆயினும் ஹிந்து. முஸ்லிம்களிடையே துவேஷத்தை வளர்த்து சுமுகமான சூழ்நிலையை குட்டிச்சுவராக்கிய பெருமை லீக் லீடர்களுக்கும் மிஸ்டர் ஜின்னாவுக்குமே உரித்தானது. சங்கேஸ்கான், ஹலாகு, இருவரின் ஆத்மாவையும் இந்தியாவில் அழைத்து வெட்கித்தலைகுனியும்படி செய்த லீக் புண்ணியவான்கள் கடந்த 10-வருஷங்களாகவே விஷத்தைக் கக்கவும் சொல்லம்புகளை பிரயோகிக்கவும் செய்துவந்தனர். நாலரை கோடி முஸ்லிம்களை அபாயகரமான நிலைமையில் சிக்கவைத்த முழுப்பொறுப்பும் லீக் தலைவர்களையே சாரும், அப்பாவிகளானநான்குகோடி ஏழை முஸ்லிம்களை பணயம் வைத்து அரசியல் சூதாட்டமும் ஆடி ஆய்விட்டது.

லீகர்களுக்கு சாத்தியமே.

பிரிவினை சாத்தியமில்லை என்று சொல்லிவந்ததெல்லாம் என்ன ஆயிற்று? இன்று எப்படி பாகிஸ்தான் ஏற்பட்டிருக்கிறது.? என்று சில லீகர்கள் நம்மை கேட்கின்றனர்.

பாகிஸ்தான் சாத்தியமில்லையென்று நாம் சொல்லிவந்ததுஉண்மைதான். நாலரைகோடி முஸ்லிம் பிணங்கள் மீது பாகிஸ்தான் கட்டடத்தைக்கட்ட முஸ்லிம்கள் துணிவார்கள் என்று நம்மால் நம்பக்கூடவில்லை. ஆனால் இன்று நாலரைகோடி மு லிம்களைபலியிட்டு பாகிஸ்தான் வாங்கப்பட்டிருக்கிறது. இவ்வித காரியம் நம்மால் ஒருபோதும் சாத்தியமேயில்லை நாம் நிச்சயமாக செய்யமாட்டோம். லீகர்களுக்கு அதுசாத்தியமே. ஆனால்எந்தஒரு "மனிதன்" கூட இதைச் செய்யமாட்டான். மரணஸாஸத்தில் கையெழுத்திட்டு நாலரை கோடி முஸ்லிம்கள் தற்கொலை செய்துகொள்வரென்று நாம் நம்பாமல் இருந்தோம். மைனரிடி

மாகாண லீக் தலைவர்கள் கடைசி நிமிஷத்திலும் விழிப் படையலாமென்றும் லீக்கவுன்ஸில் கூட்டத்தில் பிரிவினை திட்டம் அதனால் தோற்கடிக்கப்படலாமென்றும் நாம் நம்பியது வாஸ்தவம் தான் ஆனால் அவர்களில் 300-பேர் நடுநிலைமை வகித்தனர். எட்டுபேர்தான் எதிர்த்தனர். 92-பேர் ஆதரித்து திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. துரதிர்ஷ்ட வசமேயாகும் நாலரைகோடி முஸ்லிம்களை தங்கள் தலைமையின் அலங்காரபீடத்திற்குப் பலியிட்டுவிட்டனர். உலகத்தில் நம்பிக்கை துரோகத்தின் சிறந்த உதாரணம் இதைத் தவிர வேறு ஒன்றும் இருப்பதற்கில்லை. நல்லசமூகம் ஒன்றை ஈவிரக்கமின்றி நாசம்செய்யும் கொடூரத்தை மிஸ்டர் ஜின்னாவிடமே பார்க்கமுடியும்.

யாருக்கு பாகிஸ்தான்.

முஸ்லிம்களுக்கு அளித்த வாக்குறுதிகள் எல்லாம் காற்றுவாக்கில் பறந்தன. அழகிய பூஞ்சோலையை காட்டி பாலைவனத்தில் அலையும்படி விடப்பட்டனர். பாகிஸ்தான் சுவர்க்கத்தின் ஆசையை வளர்த்த முஸ்லிம் நெஞ்சம் இன்று நரகவேதனையை சகித்துக்கொண்டிருக்கிறது. "பாகிஸ்தானில் இஸ்லாமிய ராஜ்யம் அமைக்கப்படும். பாகிஸ்தான் ஏற்பட்டதும் முஸ்லிம்களின் சகல கஷ்டங்களும் நீங்கும். பாகிஸ்தான் ஸ்தாபிக்கப்பட்டவுடன் இந்திய முஸ்லிம்கள் ஹிந்து மெஜாரிடி ஆதிக்கத்திலிருந்து விடுதலை அடைந்து நிம்மதியாக வாழமுடியும்" லீக் லீடர்கள் முஸ்லிம்களுக்குச் சொல்லிவந்ததெல்லாம் இதுதான்.

இன்று பாகிஸ்தான் ஏற்பட்டு மாதங்கள் பல ஓடிவிட்டன. அதனுடைய அமைப்பு பிரத்தியக்ஷமாய் காக்ஷி அளித்துக் கொண்டிருக்கிறது. "இஸ்லாமிய ராஜ்யம்" என்று சொல்லப்பட்டதெல்லாம் ஆசையூட்டி மைனாரிடி முஸ்லிம்களின் ஓட்டுக்களை பரிப்பதற்காகவே என்பது வெட்டவெளிச்சமாய்விட்டது. முஸ்லிம்களின் நம்பிக்கை வெறும் கானல் நீராகிவிட்டது. இரண்டு சமுதாயக் கொள்கை ஒரு மோசடி. மிஸ்டர் ஜின்னா கோஷ்டி அதிகார பீடங்களில் அமருவதே அதன் லட்சியம். அவர்கள் நாடிய பதவிகளை அடைந்து ஆயிற்று. ஹிட்லரைப்போல் பிடிவாதத்தை சாதித்துக்கொண்டனர். இனி முஸ்லிம்கள் எக்கேடுகெட்டாலும் அதைப்பற்றி அவர்களுக்கு அக்கரை இல்லை.

(14-ம் பக்கம் பார்க்க)

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

1. முஸ்லிம் லீக் கலக சகாப்தத்தின் ஞாபகச் சின்னமாகும். அதன்பெயரை முஸ்லிம் தாங்கிநிற்கும் வரை முஸ்லீமல்லாதாருக்கு கலவரகால நினைவு இருந்துகொண்டே இருக்கும்.

2 கூட்டுத் தொகுதியில் வகுப்புவாத ஸ்தாபனங்களுக்கு இடம் இல்லை. அதனால் பிறதிகூலமே ஏற்படும்.

3. லீக் இருப்பதால் அதன் தலைவர்களும் தொடர்ந்து இருந்தே வருவார்கள். அவர்கள் சுயநலக்காரர்கள், அவிவேகிகள், எனவே லாயக்கற்றவர்கள் என்பது இப்பொழுது தெரிந்துவிட்டது.

4. புதிய லட்சியத்திற்கான புதிய கொள்கை[illegible] பிறசாரம் செய்ய தங்கள் லட்சியத்தை அடைய உறுதியும் கொள்கையில் அசைக்கமுடியாத நம்பிக்கையும் கொண்ட பிரசாறகர்கள் அவசியம் லீக் நீடிப்பதால் புதிய பிறசாரகர்கள் அதற்குள் புகவிடாமல் பழய குருடியாகவே அது இருந்து வரும்.

5 லீக் நீடித்தால் மிஸ்டர் ஜின்னா, பாகிஸ்தான் இவைகளுடன் அதற்குள்ள தொடர்பும் நீடிக்கும். தனியாகப் பிரிந்துவிட்டதாகச் சொல்லிக்கொண்டாலும் லீகர்களை 5-ம்படையாக சந்தேகிக்க இடமில்லாமல் போகமுடியாது.

6. லீக் கலைக்கப்பட்டால் முஸ்லீமல்லாதார் அதை ஒரு நல்ல எண்ணத்தின் அறிகுறியாகக் கொள்ளமுடியும். அந்தரங்க சுத்தியுடன் பழய கொள்கைகளை விட்டுவிட்டதாக நம்பும்படி செய்யமுடியும்.

7, லீக் கலைக்கப்பட்டுவிட்டால் அதன் பழய நடவடிக்கைகளை எடுத்துச்சொல்லி துவேஷத்தை வளர்க்க முயற்சித்தும் இதற வகுப்புவாத ஸ்தாபனங்களுக்கு சந்தர்ப்பமில்லாமல் போய்விடும்

8. லீக் நீடிப்பதால் இதற வகுப்புவாத ஸ்தாபனங்களுக்கும் வளர்ச்சியடைய சந்தர்ப்ப மளிப்பதாகும். வகுப்புவாத ஸ்தாபனங்கள் சட்டவிரோதமாக்கப்பட வேண்டும் என்ற லட்சியத்திற்கு இது முறண்பட்டதாகும்.

எனவே லீகை உடனடியாக கலைத்தே ஆகவேண்டும். இவ்விஷயத்தை நாம் அதிகமாய் வற்புருத்த வேண்டிய அவசியமில்லை. இனி இந்தியாவில் மீண்டும் லீக்கை ஸ்தாபிக்கப் போவதாகச் சொல்லப்படுவது எந்த அளவு வெற்றிபெறும் என்பது நமக்குத்தெரியும். பொதுமக்களுக்கு பதில் சொல்லியாகவேண்டுமே என்றுபயந்து லீக் அமைக்கப்போவதாக சொல்லிக்கொண்டிருப்பதினால் ஒருகால் குழப்பங்கள் ஏற்படவும் கூடும். எனவே தைரியமாக முன்வந்து லீகை கலைக்கும்படி லீக் தலைவர்களுக்கு யோசனை கூறவேண்டியது நம் கடமை. இல்லையேல் விழிப்படைந்துவரும் முஸ்லிம்கள் சீக்கிறமே லீக்கையும் லீக் தலைமையையும் குழிதோண்டிப் புதைக்கப் போகின்றார்கள் என்பது நினைவிலிருக்கட்டும்.

காங்கிரஸ் முஸ்லிம் தலைவர்களில் சிலர் திருந்திவிட்டதாகச் சொல்லிக்கொள்ளும் லீக் தலைவர்களை தங்களுடன் சேர்த்துக்கொள்ள எண்ணுகின்றனர். இது அபாயமாகும். அவர்களுடைய விசுவாசம் வெளிவேஷம் என்றும் அவர்களுக்கு இன்னும் அந்தரங்கசுத்தி ஏற்படவில்லை என்பதும் நம் முடிவாகும். அவர்களை நம்பி பொருப்பு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டால் நாமும் சேர்ந்து அழிய நேரிடும் என்று எச்சரிக்க வேண்டியது நம் கடமை.

இயற்கை குணத்தின் நிர்ப்பந்தத்தால் பாகிஸ்தானுடன் சேர்ந்து அவர்கள் ஏதாவது சதி செய்யாமல்

(9-ம் பக்கம் பார்க்க)

"ஆஸாத்"

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை.

மலர் 1. | [26—1—48] திங்கட்கிழமை | இதழ் 1

லக்னோ மஹாநாடு

மௌலானு ஆஸாத்தின் தீர்க்க தரிசனம் :—

"என்ன சிந்திக்கின்றனர் என்பது பிரச்னை அல்ல, இந்திய முஸல்மான்கள், இன்னும் எத்தகைய நேரத்தை எதிர்பார்க்கின்றனர் என்பது தான் கேள்வி."

இன்று அல்ல, நேற்று அல்ல, இருபத்தைந்து நீண்ட வருஷங்களுக்கு முன் மௌலானு அபுல்கலாம் ஆஸாத்தின் புண்பட்ட உள்ளத்திலிருந்து பிறந்த கேள்வி இது.

இந்த இடைக்காலத்தில் எத்தனையோ துன்பப்பருவங்கள் வந்து கழிந்தும் போயின, வேற்றுமை விஷப்புயல்கள், வகுப்புவாத சண்டமாருதங்கள், மாறி, மாறி, அடித்தும் ஓய்ந்தன. ஆயினும் மௌலானு ஆஸாதின் கேள்வி முஸ்லிம்களின் கவனத்தைக் கவரமுடியவில்லை.

ஆனல் இன்று, படுகுழியில் விழுந்து முதுகெலும்பு முறிந்து பிணக்குவியலின் நடுவே நிமிர்ந்து நிற்கவும் முடியாத நிலைமையில் இருக்கும் சமூகத்தின் காதுகளில், அந்தகாரம் நிறைந்த எதிர்காலத்தின் பயங்கர தோற்றத்தைக் கண்டு நடுங்கும் நாலுகோடி முஸ்லிம்களின் உடைந்த உள்ளங்களில், கால் நூற்றுண்டுக்குப் பிறகு, மௌலானு ஆஸாதின் கேள்வி எதிரொலிக்காமல் போகவில்லை. நாலுகோடி மக்களின் கவனம் உண்மையான வழி காட்டியின் பக்கம் திரும்பிற்று. இந்தியா எங்கிலுமுள்ள லீகர்களும் முஸ்லிம்களும் வழி காட்ட முன் வரும்படி வேண்டிக்கொண்டனர். தந்திகளும், கடிதங்களும் வந்து குவிய ஆரம்பித்தன. இந்திய முஸ்லிம்கள் உடனடியாக திட்டமானதொரு முடிவுக்கு வந்தாகவேண்டும். என்று தீர்மானித்ததற்கும் பழய போக்கில் அவர்களுக்கு சலிப்பு தட்டிவிட்டதற்கும் லக்னோ மகாநாடே போதிய சாட்சியாகும். "எத்தகைய நேரம்" என்று மௌலானு ஆஸாத் அன்று கேட்ட "அத்தகைய நேரம்" இன்று வந்தேவிட்டது. துன்பங்கள் நிறைந்துள்ள சோதனை காலத்திற்கு சீக்கிரமே முற்றுப்புள்ளி வைத்துவிட்டு கடமையை உணர முஸ்லிம்கள் காட்டிய ஆர்வமே லக்னோ மஹாநாடு கூடுவதற்கு காரணம் மஹாநாட்டு அழைப்பிதழிலேயே மௌலானு ஆஸாதின் கீழ்வரும் வாசகம் அடங்கியிருந்தது.

மௌலானுவின் அறைகூவல்.

"மாறுதல் அடைய உண்மையான ஆசை உங்களுக்கு ஏற்பட்டிருப்பது வாஸ்தவமானல், சரித்திரம் தன்னையே மாறிக்கொண்டதைப்போல் நீங்களும் உங்களை மாற்றிக் கொள்ளுங்கள். இன்றைக்கும் புரட்சியின் ஒருகட்டத்தை நாம் பூர்த்தி செய்திருக்கிறோம். நம்முடைய தேசத்தின் சரித்திரத்தில் இன்னும் சில பக்கங்கள் பாக்கியுள்ளன. சித்தமாக இருக்கும்பக்ஷத்தில் அந்த பக்கங்களில் வரையப்படுவதை நீங்கள் அலங்கரிக்க முடியும்."

80-ஆயிரத்துக்கும் அதிகமான முஸ்லிம்கள் மஹாநாட்டிற்கு வந்தனர். பாமரமக்களின் கூட்டமல்ல. முஸ்லிம் சமூகத்தின் சிறந்த அறிவாளிகளின் கூட்டம். பிரயாணத்தில் பல தொல்லைகளிருந்தும் ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் இருந்துவந்த முஸ்லிம்கள் ஏராளமாகஇருந்தனர். முஸ்லிம்லீக் கமிட்டிகளின் பொருப்புவாய்ந்த லீகர்கள் மட்டிலும் 700-க்குமேல் வந்து கலந்துகொண்டார்கள். அவர்கள் வந்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. லக்னோ மஹாநாடு செய்த முடிவுகளைத்தவிர வேறு திட்டங்கள் தங்களிடம் இருப்பதாகச் சொல்லிக்கொண்டு அவர்கள் முன்வர முடியாது. வரவும் இல்லை. மனப்பூர்வமாக ஏற்கத் தயாராய் இருந்தாலும் இல்லாவிட்டாலும் முஸ்லிம்களுக்குள்ள கடைசி சந்தர்ப்பமும் இறுதியான வழியும் லக்னோ மகாநாட்டை விட்டால் வேறு ஒன்றும் இல்லை. இதை அவர்கள் உணர்ந்திருக்கவேண்டும். தங்கள் கடந்தகால போக்கிற்கும் தவறான அரசியல் துறையில் பட்ட பாட்டிற்கும் கைமேல் பலன் கிடைத்த பிறகும் அவர்கள் உணராமல் எப்படி இருக்க முடியும்.

சொல்லம்பு வீரர்கள்.

இன்றைய நிலைமைக்கு லீக்தலைவர்களின் மனதைபுண்படுத்தும் கடுஞ் சொற்களே காரணமாகும்.

1946-ஏப்ரில் 17-ல் டில்லிகன்வென்ஷனில் காயிதே ஆஜம் கீழ் வருமாறு பேசியதை லீகர்கள் அதற்குள் மறந்திருக்க முடியாது என்று நம்புறோம்.

"இந்த யுத்தத்தில் நாம் நிலை தடுமாறமாட்டோம். பாகிஸ்தானுக்காக உயிர்கொடுப்போம். நாம் நேசிக்கும் ஒவ்வொன்றையும் ஏன்! எல்லாவற்றையும் அர்ப்பணிப்போம்."

அதே கூட்டத்தில் பேசிய வங்காள வீரர் சுகரவர்த்தியின் பேச்சையும் மறந்திருக்கமாட்டார்கள்.

"முஸ்லிம்கள் முஸ்லிம்லீக் கொடியின் கீழ் திரண்டு சமர்புரிவார்கள். முஸ்லிம்கள் ஆண்மை மிகுந்ததொரு சமுதாயம். நாம் போர்க்கோலம் பூண்டால் நாளை என்ன

நடக்கும் என்று முன் கூட்டிச் சொல்ல முடியாது. நம்முடைய உயிர்களை விடத்துணிந்துவிட்டோம்."

பிறகு கலீகுஸ்ஸமான் பேசியதையும் லீகர்கள்நிதான புத்தியுடன் சிந்தித்துப் பார்த்திருப்பார்கள்.

"நம் விதியை நாமே நிர்ணயிப்போம். தேசத்தில் கலவரங்கள் ஆரம்பமானால் முஸ்லிம்கள் மற்றவர்களை விட பின்னடைந்து விடமாட்டார்கள். முஸ்லிம்கள் குண்டர்கள் என்றும் ஹிந்துக்கள் கோழைகள் என்றும் மஹாத்மா காந்தி சொல்லிவருகிறார். கோழைகளைவிட குண்டர்கள் அதிக வம்பு வளர்க்க முடியும் என்பது எல்லோரும் அறிந்ததே. ஜனப் காயிதே ஆஜம் அவர்களே! உங்கள் உத்திரவை எதிர்பார்க்கிறோம். உயிர்விடகாத்திருக்கின்றோம்."

மனக்கசப்பை உண்டுபண்ணத்தக்க விதத்தில் இதர லீக்தலைவர்களின் பேச்சை நாம் இங்கு குறிப்பிட விரும்பவில்லை. அது சாத்தியமும் இல்லை. காயிதே ஆஜம், சுகரவர்த்தி, கலீகுஸ்ஸமான் ஆகிய மூவரும் ஒரேகூட்டத்தில் பேசியதை உதாரணத்திற்காகவே எடுத்துக் காட்டியுள்ளோம். மேலும் மனக்கசப்பை வளர்ப்பது நம்நோக்கமல்ல. சரித்திர நீதிமன்றத்தில் பிணங்களாய் குவிந்து கிடக்கும் இந்திய நிரபராதிகளின் அழிவிற்கு காரணத்தை விசாரித்தறிந்து தீர்ப்பு கூற சரித்திரப்பூர்வமானதொரு அடிப்படையை நிர்ணயிப்பதே நம் நோக்கமாகும்.

நாம்நேசிக்கும் "ஒவ்வொன்றையும்" ஏன் "எல்லாவற்றையும்" அர்ப்பணிக்கும்படி காயிதே ஆஜம் கோரினார். மனிதர்களுக்கு உயிரைவிட மானமே பெரிது; எனவே உயிரைக்காட்டிலும் முஸ்லிம்கள் அதிகமாய் நேசிப்பது மானமாகத்தான் இருக்கமுடியும். பாகிஸ்தானுக்காக உயிர் மட்டுமின்றி நாம்மானத்தையும் அர்ப்பணித்தோம். ஜ்வாலாபூர், டேராடூன், ஸஹாரன்பூர், கிழக்குப் பாஞ்சால நகரங்கள், டில்லி, பீஹார், முதலிய இடங்களில் காயிதேஆஜம் கோரிக்கையை பூர்த்தி செய்யும் முயற்சியில் நாம் வெற்றி பெறமுடியவில்லை. நம்மிடமுள்ளதில் பெரும்பகுதியை அர்ப்பணிக்க முடிந்ததேயொழிய காயிதே ஆஜம் கோரிய "எல்லாவற்றையும்" அர்ப்பணிக்க முடியாமலே போய்விட்டது. ஆனாலும் நவகாலி, மேற்கு பஞ்சாப் நகரங்கள், எல்லைப்புரம், சிந்து, பலூசிஸ்தானம் முதலிய இடங்களின் காயிதே ஆஜம் கோரிக்கையான "எல்லாவற்றையும் அர்ப்பணித்திருக்கிறோம். ஒரு முஸ்லிம் கொல்லப்படுவதால் முஸ்லிம்களின் எண்ணிக்கையில் ஒன்று குறையுமேயொழிய வேறெதுவுமில்லை. ஒரு முஸ்லிம் பெண்மணி கற்பழிக்கப்பட்டால் நஷ்டம் அவளோடுமட்டும் தான். ஆனால் முஸ்லிம்களால் முஸ்லிமல்லாதார் அநியாயமாய் கொல்லப்பட்டாலும் முஸ்லிம் அல்லாத ஒரு பெண்மணி கற் பழிக்கப்பட்டாலும் களங்கம் இஸ்லாமுக்கே ஏற்படும். எனவே பீஹார் முதலிய இடங்களில் தங்கள் பெரும் பகுதியை அர்ப்பணித்த முஸ்லிம்கள் நவகாலி முதலிய இடங்களில் "எல்லாவற்றையும்" பாகிஸ்தானுக்காக அர்ப்பணித்திருக்கின்றனர்.

"நாம் போர்க்கோலம் பூண்டால் நாளை என்ன நடக்கும் என்று முன்கூட்டிச் சொல்ல முடியாது" என்று பேசிய சுஹரவர்த்தி "நாளை" என்று குறிப்பிட்ட இன்று என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதை கண்களை திறந்துகொண்டு பார்த்தால் இனி "நாளை என்ன நடக்கும்" என்று அவரால் சொல்ல முடியாமல் போகாது. நேற்று அவரால் சொல்ல முடியாமல் இருந்தது இன்று முஸ்லிம்களின் தலைவிதியாக அமைந்து விட்டது.

"நம் விதியை நாமே நிர்ணயிப்போம்" என்று தட்டிய கலீகுஸ்ஸமான் தம் விதியை தாமே நிர்ணயித்துக் கொண்டவர்களின் துர்க்கதியைப் பகிர்ந்துகொள்ளவோ அல்லது பார்த்து சகிக்கவோ மனமில்லாதவராய் பாகிஸ்தானுக்கு போய்விட்டார் போலும். லீக் லீடர்களும் ஏழை முஸ்லிம்கள் மாளவும் தான் "நம் விதியை நாமே நிர்ணயிப்போம்" என்று கலீகுஸ்ஸமான் அன்று அப்படி பேசினரோ! என்னமோ யாருக்குத்தெரியும்.

லீக் முடிவையே பின்பற்றினர்.

நாம் முடிவு செய்தோம். லீக் தலைவர்கள் அதை பாகிஸ்தானின் பெயரால் உலகுக்கு அறிவித்தனர். நம்முடைய முடிவை ஹிந்து மஹாசபை, ராஷ்ட்ரீயசுயம் சேவாசங்கம், அகாலிதளம், அனுசரிக்க முன்வந்தபோது தான் நாம் செய்த முடிவின் நாசகரமானதன்மை நமக்கு விளங்க ஆரம்பித்திருக்கிறது. அதற்காக நம்முடிவையே அனுசரித்து நடப்பவர்களின்மீது குறைகூற நமக்கு உரிமை ஏது? நம்முடிவின் பயங்கர விளைவுகளை கண்டு நாம் மனமுடைந்து இருக்கும் இச்சமயத்தில் முடிவு செய்யத் தூண்டிய தலைவர்கள் நம்முடனில்லை. ஆயினும் "எல்லாவற்றையும்" அர்ப்பணித்து பாகிஸ்தான் வாங்கிக்கொடுத்தவர்களின் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட ஒரு வார்த்தையும் பாகிஸ்தான் சாஸனத்தில் இல்லாமலிருப்பதைக் குறித்து தலைவர்களை கேட்க நமக்கு உரிமை நிச்சயம் உண்டு. யாரைப் போய் கேட்பது? தலைவர்கள் எங்கே? நாலு கோடி மக்களின் பதறும் உள்ளங்களான நாலு கோடி நீதிமன்றங்களும் அவர்கள் விஷயத்தில் ஒரு தீர்ப்பு செய்வதைத் தவிர வேறு என்ன செய்ய இருக்கிறது.

மறந்துவிட வேண்டிய மனக்கஷ்டத்தை நினைவூட்டுவதுசரியல்ல என்பதை நாம் ஒப்புக்கொள்கிறோம். ஆயினும் இன்றைய நிலைமையை ஸ்ருஷ்டித்த கடந்தகால தவறுகளை எண்ணிப்பார்க்காமல் எதிர்காலத்தை நிர்ணயிக்க முடியாது. முட்களின் உறுத்தலுக்கு பயந்து புஷ்பங்களை சேகரிப்பது முடியாத காரியம்.

எனவே இந்திய முஸல்மான்கள் பாகிஸ்தானுக்காக தாங்கள் நேசிக்கும் "ஒவ்வொன்றையும்" ஏன், "எல்லாவற்றையும்" அர்ப்பணித்தும் விமோசனம் காணமுடியாமலே போய்விட்டதை உணராமல் இருப்பதற்கில்லை. மிஸ்டர் ஜின்னாவின் தலைமை பீடத்தில் இஸ்லாமின் கௌரவத்தையும் பலியிட்டு முடிவில் மௌலானா ஆஸா

தின் கேள்விக்கு பதிலளிக்க முன் வந்திருக்கின்றனர் என்பதையே லக்னோ மஹாநாடு எடுத்துக்காட்டுகிறது.

காயிதே ஆஜம் பொருப்பை தட்டி கழித்து விட்டார். இந்திய முஸ்லிம்கள் தேசவிசுவாசிகளாய் நடந்து கொள்ள வேண்டும் என்று அறிவித்துவிட்டார். பிறிவினைக்குப்பிறகு பாகிஸ்தான் இந்திய முஸ்லிம்கள் விஷயத்தில் தலையிட முடியாது. தலையிட்டால் அது தீமையே விளைவிக்கும். டில்லி முதல் ஜ்வாலாபூர் வரையில் முஸ்லிம்களைக் காப்பாற்ற பாகிஸ்தானியும் வரவில்லை வரவும் தயாராய் இல்லை. அவர்களை எதிர்பார்ப்பதும் பைத்தியக்காரத்தனம் என்பதை இந்திய முஸ்லிம்கள் உணர்ந்தும் விட்டனர்.

ஆகவே முஸ்லிம் உலக சிரேஷ்டர், வாழ்க்கையை ...மயாக கொண்டுள்ள கர்ம புருஷர் தேசத்திற்கு, சமூகத்திற்கும் தன்னையே அர்பணித்துவிட்ட உத்தமர், நாற்பது வருஷங்களாக தன்னுடைய கொள்கையில் இம்மியளவும் மாறுதலின்றி உறுதியுடன் இருந்துவரும் ஸ்திரமான தலைவர். அரசியல் அறிஞர் 'மௌலானா ஆஸாத்' வழிகாட்டியாக கிடைத்திருப்பது இந்திய முஸல்மான்களின் பாக்கியமேயாகும். எனவே இந்திய முஸல்மான்கள் பின்வரும் விஷயங்களை கருத்தில் கொள்ள வேண்டிய தவசியம்.

நம்முடைய கடமை.

1. ஆகஸ்ட் 15-க்கு பிறகு நடந்த நாசத்திற்குப் பிறகும் இந்த நாட்டில் முஸ்லிம்கள் இருந்துவர முடிந்ததென்றால் (ஆண்டவன் சங்கல்பத்தை தவிர) அதற்கு மௌலானா அபுல்கலாம் ஆஸாத் ஒருவரும், மஹாத்மா காந்தி, பண்டித ஜவஹர்லால் நேரு, ராஜன் பாபு, ஸர்தார் படேல், முதலியோரின் முயற்சியும் தான் காரணம். இன்றைய நிலைமையில் இந்திய முஸல்மான்களுக்கு வழிகாட்ட மௌலானா ஆஸாத் ஒருவரால் தான் முடியும். இந்திய முஸல்மான்கள் ஏகோபித்து 'லக்னோ மகாநாடு' காட்டிய வழியைப் பின்பற்றுவதன் மூலம் இன்றைய கலகத் தீயிலிருந்து மீண்டும் பத்தரை மாற்று பசும் பொன்னாக வெளிவரமுடியும்.

2. டிஸம்பர் 26-வரையில் நம் அபிப்ராயங்கள் எப்படி இருந்திப்பினும் இனி அப்படி இருப்பதுசரியல்ல. ஏற்கனவே நம் சக்தி மூன்று கூறுகளாப் பிரிந்து விட்டது. இனி ஒன்றுபட்டு முடிவு செய்ய வேண்டும். மௌலானா ஆஸாத்தை ஒன்று பட்டு பின்பற்றுவதன் மூலம் தேசத்தின் அரசியல் சக்தியின் ஒரு பகுதியாக நாம் இருக்கமுடியும். இன்றைய நிலைமையை மாற்றி சுமுகமானதொரு சூழ்நிலையை ஏற்படுத்துவது அப்பொழுது தான் சாத்தியம்.

3. பண்டித நேரு ஜனநாயக அடிப்படையில் இந்திய ஆட்சியை உருவாக்கும் இச்சமயத்தில் நாம் மத அடிப்படையில் அரசியல்என்று பேரளவில் பேசிக்மொண்டிருப்பதோ, அல்லது மதத்தின் பெயரால் அரசியல் ஸ்தாபனங்கள் வைத்துக்கொண்டிருப்பதோ சரியல்ல. இன்று மத அடிப்படையில் ஆட்சி அமைக்கப்பட்டால் 29-கோடி ஹிந்துக்களில் 4-கோடி முஸ்லிம்கள் இருப்பர். லீகர்களைப் போலவே ஒருக்கால் ஹிந்துக்களும் ஹிந்துராஜ்யத்தை ஆதரித்து காங்கிரஸை தோற்கடித்துவிட்டால் 4-கோடி முஸ்லிம்களின் பிணங்களின் மீது ஹிந்துராஜ்யக் கட்டடம் எழுப்பப்படும் என்பது நிச்சயம். ஆகையால் முஸ்லிம்கள் காங்கிரஸில் சேருவதன்மூலம் அதை பலப்படுத்தி பிற்போக்கு சக்திகளை எதிர்த்து முறியடிக்கவேண்டும்.

4. நம் தேசம் மேலும் பிரிவினைக்குள்ளாக நேரிடுமோவென்று நாம் பயப்படவேண்டிய நிலைமை இருந்து வருகிறது. பொதுமக்களால், பொதுமக்களுக்காக, பொதுமக்கள் ஆட்சியமைக்கப்பெற்ற பலம்வாய்ந்த இந்தியாவை நாம் ஆதரித்து நிற்கவேண்டும்.

5. தனி சமுதாயக் கொள்கையைவிட்டு பரந்தநோக்கத்துடன் நாம் பரந்த இந்திய உபகண்டத்தை நோக்க வேண்டும். கடந்த காலப்போக்கால் ஏற்பட்டுவிட்ட மனக்கசப்பு நீங்கி அன்பு வளர பாடுபடவேண்டும். குழப்பம்நீங்கி, விரோத உணர்ச்சி மறைந்து, அமைதியும் சிநேக பாவமும் நிலவவேண்டும். இதில் நாம் வெற்றி அடைய வேண்டும் என்றால் நாம் நம்முடைய சகல சக்திகளையும் மகாத்மா காந்தி, மௌலானா ஆஸாத், பண்டிதநேரு முதலியோருக்கு அளிக்கவேண்டியதவசியம்.

6. முஸ்லிம்களின் மத, கலாசார, நாகரீக, விஷயங்களைக் கவனிப்பதற்கு ஒரு ஸ்தாபனம் வேண்டியது அவசியமாகும். நீண்ட காலமாக இவ்வித சேவையையும் அரசியல் சேவையையும் செய்துவரும் ஜமீயதுல்உலமாயே ஹிந்த் ஸ்தாபனம் இனி அரசியல் தொடர்பற்ற மத விஷயங்களைக் கவனித்துக்கொள்ள போதுமானது இத்துறையில் முஸ்லிம் லீக்கின் பெயர் பிரஸ்தாபிக்கப்படுவதும் அனர்த்தத்தையே விளைவிக்கும்.

7. முஸ்லிம் லீக் இனி இங்கு நீடிப்பதில் அர்த்தமில்லை. அதனால் பிரயோஜனமும் ஏற்படமுடியாது. ஆகவே அது கலைக்கப்படவேண்டும். இந்திய முஸ்லிம் லீக்கை தனிஸ்தாபனமாக அமைக்கப்போவதாக சொல்லப்படுகிறது. ஒரு முஸ்லிம் லீக்கினால் இந்திய முஸ்லிம்கள் பட்ட துன்பங்களே போதும். 5-ம்படை என்று சந்தேகிக்கப்படுவது நீங்கவேண்டுமானால் லீக்பெயரையும் நாம் உச்சரிக்காமல் இருப்பது அவசியம். இந்திய முஸல்மான்கள் இனியும் கண்மூடித்தனமாக இருக்கப்போவது இல்லையென்று அறிவிக்கவேண்டிய காலம் வந்துவிட்டது லீக் புனருத்தாரணம் செய்யப்படாமல் முஸ்லிம்கள் பார்த்துக்கொள்ளவேண்டும். இனியும் தங்கள் போக்கை மாற்றிக்கொள்ளாமல் லக்னோ மஹாநாடு காட்டியிருக்கும் புத்திசாலித்தனமான வழிகளைப் பின்பற்றாமல் போனால் முஸ்லிம்களின் எதிர்காலம் எத்தகையதாய் இருக்குமென்று யாரும் சொல்லுவதற்கில்லை.

[5-ம் பக்கம் தொடர்ச்சி.]

இருக்க முடியாது அவர்களுடைய நிழலும் படாமல் நாம் விலகியிருக்கவேண்டியது அவசியம். இதுவரை இவர்கள் சாக்குப்போக்குகளை சொல்லிக்கொண்டு போவதும் மிஸ்டர் ஜின்னாவின் நாசகரமான யோசனை கேட்டுவந்து குழப்பங்களை உண்டுபண்ண முயற்சிப்பதும், நின்றபாடில்லை.

நாட்டு விடுதலைக்குப்பிறகு பெரும் பொருப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. மத்திய சர்க்காரின் ஒரு டைப்பிஸ்ட்கூட துரோகம்செய்வதால் விபரீதங்கள் விளையலாம். பொருப்பு வாய்ந்த பதவிகளில் நம்பிக்கையானவர்களை அமர்த்துவது அத்தியாவசியம். காங்கிரஸ் முஸ்லிம்களிலும் ஸ்திரபுத்தி யில்லாதவர்களுக்கு நல்ல எதிர்காலம். இருக்க முடியாதென்றால் லீக் லீடர்களைப்பற்றி சொல்ல வேண்டியதே இல்லை.

காங்கிரஸில் சேரவேண்டுமென்று நாம் சொல்லும்போது ஏமாற்றப்பட்ட, நட்டாற்றில்கைவிடப்பட்ட முஸ்லிம் பொது மக்களை குறிக்கின்றோம். முஸ்லிம் பொது மக்களுக்கு காங்கிரஸின் கதவு என்றுமே திரந்துகிடக்கிறது.

இந்திய முஸல்மான்கள் இனி புதிய தலைப்புடன் வாழ்க்கையின் புதிய படலத்தை துவக்கவேண்டும்.

லீக்கையும் கலைத்துவிட்டு வேறு தனி ஸ்தாபனமும் அமைக்கவில்லை என்றால் முஸ்லிம்கள் எந்தக்கட்சியில் சேரவேண்டும் என்பது முக்கிய பிரச்னை, நாம் தேர்தெடுக்கும் கட்சி நாம் தீர்மானித்திருக்கும் கொள்கைக்கு ஒத்திருப்பதுடன், நம் லட்சியத்திற்கும் ஒத்திருக்க வேண்டியது அவசியம்.

ஜன்நாயகம், முற்போக்கு, சமத்துவம், சமதர்மம், முதலிய தேசீய நோக்கங்கள் கொண்ட முஸ்லீமல்லாதாருடன் ஒத்துழைத்து பாஸிஸ வகுப்புவாத முதலாளித்வ, பிற்போக்காளர்களை எதிர்த்து நாம் போராடவேண்டும். இந்த பிற்போக்கு கும்பலில் ஹிந்துக்கள் மட்டுமின்றி முஸ்லிம்களும் இருக்கின்றனர். முஸ்லிம்களிலுள்ள முதலாளித்வ, வகுப்புவாத இரு சமுதாயக்கொள்கையுள்ள முஸ்லிம் ராஜ்ய ஆதரவாளர்களாகிய பாஸிஸ்டுகளை எதிர்த்து நாம் போராடவேண்டியிருக்கும். நாட்டின் முற்போக்குச் சக்திகள் ஒன்றுசேர்ந்து பிற்போக்கு சக்திகளை முறியடிக்க முற்போக்கு நோக்கமுள்ள சகல மதத்தினரும் சேர்ந்து சகல மதத்தினரையும் கொண்டுள்ள பிற்போக்கு கும்பலை தோற்கடிக்க ஐக்கிய முன்னணி ஒன்றை அமைக்கவேண்டும். காங்கிரஸில் உள்ள ஹிந்துக்கள் ஹிந்து பிற்போக்காளரையும், காங்கிரஸ் முஸ்லிம்கள் முஸ்லிம் பிற்போக்காளரையும் இன்று எதிர்த்து நிற்பதைப்போலவே இந்த ஐக்கிய முன்னணியில் இருப்பவர்கள் ஜாதி, மத; பேதமின்றி பிற்போக்கு எங்கிருப்பினும் அதை தேடிப்பிடித்து புதைத்தாகவேண்டும். இந்திய முஸல்மான்களின் எதிர்கால அரசியல் கொள்கை இதுவாகவே இருக்கும்.

இவ்வித நோக்கங்களைக்கொண்ட ஸ்தாபனம் காங்கிரஸ் மஹாசபைதான். தேசீய ஸ்தாபனம் என்று சொல்லிக்கொள்ள தகுதியுள்ள ஸ்தாபனம் அது ஒன்றுதான். அதன் கதவும் எல்லோருக்கும் எப்பொழுதும் திறந்திருக்கிறது. நாட்டு மக்களின் நம்பிக்கையைப்பெற்ற முற்போக்கு வாதிகள் அதில் திரண்டிருக்கின்றனர். இந்த ஸ்தாபனத்தை பலப்படுத்துவது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் இந்தியனுக்கும் கடமையாகும்.

இன்று நம் தாய் சபைக்கு கடுமையான சோதனை காலம். வகுப்புவாத சூராவளி அதை அடித்துக்கொண்டு போக பார்க்கின்றது. அழிந்தாலும் சரி கொள்கையை விட்டுக்கொடுப்பதென்பது நடக்காத காரியம் என்பதை அது நிரூபித்துக்காட்டியும் விட்டது சமீப கலவரங்களில் சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளும், சிறுபான்மையோரைக்காக்க இந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்த தலைவர்கள் தங்கள் சமூகத்தையே எதிர்த்து போராடியதும் இந்திய நாட்டின் எதிர்காலம் அவர்களிடமே உள்ளது என்பதற்குப் போதிய சான்றுகளாகும்.

மஹாத்மா காந்தி, பண்டித நேரு பண்டித பந்த், ராஜாஜி போன்ற தலைவர்கள் கலவரங்களில் செய்த சேவை ஹிந்து சமூகத்திற்கே பெருமையை அளித்ததுடன் உலகத்தில் ஹிந்துக்களின் கீர்த்தியும் ஓங்கியிருக்கிறது. அதிர்ஷ்டவசமாக முஸ்லிம்களிலும் இம்மாதிரியான உத்தமர்கள் இருக்கத்தான் செய்கின்றனர். வகுப்புவாத குறுகிய மனப்பான்மையின்றி இந்தியாவின் நலனைக் கருதும், முஸ்லிம்களுக்குமட்டுமின்றி ஹிந்து சீக்கியர்களுக்கும் நண்பர்களாக இருக்கும் உத்தம முஸ்லிம்களால் முஸ்லிம் சமூகத்தின் நற்பெயரும் உலகத்தில் காப்பாற்றப்பட்டிருக்கிறது இம்மாதிரியான தலைவர்களிடம் முஸ்லிம்கள் தங்கள் படகை ஒப்படைத்துவிட்டு நிம்மதியாக இருக்கலாம்.

முஸ்லிம்கள் இனி தயக்கமின்றி கூட்டம் கூட்டமாக காங்கிரஸில் சேரவேண்டும். கொள்கையில் நம்பிக்கையும் உறுதியும் இல்லாமல் அரசியல் மோசடி எண்ணத்துடன் சேருபவர்கள் ஏமாற்றமே அடைவர். 5 லட்சத்திற்கு பதில் 5 பேர்களேயானாலும் அந்தரங்க சுத்தியுடன் இருந்தால் அதுவே போதும். அரசியல் சம்பந்தமற்ற நாகரீக, கலாசார, விஷயங்களை கவனிக்க தனி ஸ்தாபனம் இருக்கலாம். அரசியல் துரையில் காங்கிரஸில் சேர்ந்து மற்றவர்களுடன் தோளோடு தோள்நின்று இந்திய அரசியல் கப்பலை நடத்திச் செல்வோமாக.

சிலர் கம்யூனிஸ்ட் அல்லது சோஷலியஸ்ட் கட்சிகளில் சேரும்படி முஸ்லிம்களுக்கு யோசனை கூறுகின்றனர். இன்றைய நிலையில் அது உகந்ததல்ல. ஸோஷிய

லிஸ்ட் கட்சியில் சேர்ந்தால் வலதுசாரிகளை எதிர்க்க வேண்டியிருக்கும் நிலைமையை உத்தேசித்து முஸ்லிம்கள் அதிகாரத்தில் இருக்கும் வலதுசாரிக்கட்சியுடன் ஒத்துழைப்பதே நல்லது. இதனால் நிர்வாக காரியங்களில் முஸ்லிம்களுக்கும் பிரதிநிதித்வம் இருக்கமுடியும். அரசியலிலிருந்து அறவே விலகியிருந்தவர்கள் திடீரென இடதுசாரிக்கட்சியுடன் சேர்வது நஷ்டத்தையே கொடுக்கும்.

வலது சாரிகளுடன் சேர்வதால் நிர்வாகத்தில் இடம் பெறமுடியுமேயொழிய, மக்களுக்கு சேவை செய்ய வேண்டுமாயின் ஸோஷியலிஸ்டாகத்தான் இருக்கவேண்டும் என்று கேட்பது நியாயமே. நாம் இரண்டு சாராருக்கும் பொதுவாக நடப்போம். பொதுமக்களுக்கும், நம் நிலைமைக்கும் குந்தகம் ஏற்படாமல் பார்த்துக்கொள்வோம். வலதுசாரிகளுடன் ஒத்துழைத்தாலும் இடதுசாரித்தலைவர் ஜயப்பிரகாஷ் நாராயண் அவர்களின் செல்வாக்கும் ஸோஷியலிஸ்ட் கொடியும் பலம் பெறுவதற்காக நாம் பாடுபடுவோம். 'காங்கிரஸின் சுதந்திர லட்சியம் கைகூடிவிட்டதால் இனி "ஸோஷியலிஸ்ட் இந்தியக்குடியரசு நிர்மாணித்தல்" தனது லட்சியமாகக்கொள்ளும்படி நாம் காங்கிரஸை கேட்டுக்கொள்ளுவோம் முற்போக்குக் கட்சிகளுக்கு நமது ஒத்துழைப்பு கிடைப்பது நிச்சயம்.

கம்யூனிஸ்ட் கட்சியும் முற்போக்கான ஸ்தாபனம் தான். நாட்டை முன்னேற்ற அதனால் சாத்தியமே. ஆனால் மாஸ்கோவிற்கும் அதற்குமுள்ள தொடர்பு பெரும் புதிராகவே இருந்துவருகிறது. இந்த ஒரே காரணத்தால் கட்சி பலமடைய முடியாமல் இருக்கிறது இரண்டு நாடுகளிடம் விசுவாசம் கொண்டிருக்கும் இக்கட்சியின் சூத்திரக்கயிர் மாஸ்கோவாசிகள் கையில் இருக்கிறது முஸ்லிம்கள் இதில் சேர்வதால் பாகிஸ்தானுக்குப் பதில் மாஸ்கோ 5-ம் படைக்காரர்களாகவே கருதப்படுவார்கள். இனி இங்கு அன்னிய நாட்டிடம் விசுவாசமுள்ளவர்களுக்கு இடமிருக்கமுடியாது

எனவே, முஸ்லிம்கள் தங்கள் பழைய போக்கை மாற்றிக்கொண்டு இந்தியர்கள் என்ற மனப்பான்மையுடன் இந்தியாவின் முன்னேற்றத்திற்கு உழைத்தால் தேசத்துடன் அவர்களும் முன்னேற முடியும். குறுகிய காலத்தில் உலக மக்கள் பிரமிக்கும்படி ஆசிய நாடுகளின் நாயகமாக விளங்கக்கூடியதொரு நவீன இந்தியாவை நாம் நிர்மாணிக்க முடியும்.

நாலரை கோடி இந்திய முஸ்லிம்களாகிய நாம் பண்டித ஜவஹர்லால் நேருவுக்கு வாக்களிப்போம். "நில்லுங்கள், உறுதியுடன் நில்லுங்கள், தலையை உயர்த்தி நில்லுங்கள், மார்தட்டி நில்லுங்கள், பிற்போக்கு சக்திகளுக்கு வணங்காமுடி மன்னனாக நில்லுங்கள், வகுப்புவாத அரக்கனை வெட்டி வீழ்த்தும் வீரனாக நில்லுங்கள், உயர்ந்த உங்கள் லட்சியங்கள் சித்திபெற நில்லுங்கள், உங்கள் தலை உலகம் பூராவிலும் உயரட்டும். இந்தியாவை துர் எண்ணத்துடன் கண்ணெடுத்து பார்த்தால் அது நன்மை அளிக்காது என்று உலகிற்கு எடுத்துச் சொல்லுங்கள். நாலரை கோடி முஸ்லிம்களாகிய நாம் உங்களை பின்பற்றுகிறோம். உலகம் நம்மை வம்புக்காரர்கள் என்று சொல்லுகின்றது. உங்களுடைய ஒரு ஜாடையே போதும். உங்களுக்காக நாலரை கோடி வம்பர்களாகிய நாம் கண்ட துண்டங்களாக வெட்டித் தள்ளப்படவும் தயார்.

"ஜவஹர்லாலுடன் ஒத்துழையுங்கள்" என்பதே நம் கோஷம். (தொடரும்)

பாகிஸ்தானிலுமா இஸ்லாம் உதாசீனம்!

லஞ்சம், மதுபானம், விபசாரம் தாண்டவமா!

மொலானா ஷப்பீர் அஹ்மத் உஸ்மானியின் 27-12-47 ல் அரிய பிரசங்கம்

நேற்று வெள்ளிக்கிழமை தொழுகைக்குப் பிறகு மௌலானா ஷப்பீர் அஹ்மத் உஸ்மானி நிகழ்த்திய நீண்டதொரு பிரசங்கத்தின் சாராம்சம் :— "இன்று நமக்குள் புரையோடியிருக்கும் ரணங்களை நாம் இஸ்லாமிய போதனைகளை பின்பற்றுவதன் மூலமாகத்தான் ஆற்ற முடியும். இன்று பாகிஸ்தானில் அனுசரிக்கப்படும், ஆகஸ்டு 15-க்கு முன் அனுசரிக்கப்பட்ட இஸ்லாமுக்கு புறம்பான முறைகளை நிச்சயமாக இனியும் நாம் சகித்துக்கொண்டிருக்கமுடியாது. இன்றைக்கும் பாகிஸ்தானில் சாராயக்கடைகள் மும்மரமாய் நடந்துவருகின்றன. அங்கு சதா கூட்டமும் இருந்துவருகிறது. விபசார மார்க்கட்டு மலிந்துகிடக்கிறது. நிர்வாக வேலைகளில் லஞ்சம் தாண்டவமாடுகிறது. சிந்துமாகாண, மத்திய சர்க்கார் மந்திரிகள் வெள்ளிக்கிழமை தொழுகைக்குக் கூடவருவதே இல்லை.

"பொதுவாக ஆகஸ்டு 15-க்குமுன் இருந்துவந்த ஒழுக்கக்கேடு அப்படியே பாகிஸ்தான் ஏற்பட்ட பிறகும் இருந்துவருகிறது. இந்நிலையில் பாகிஸ்தான் இஸ்லாமிய ராஜ்யம் என்று சொல்லக்கூட வெட்கமாயிருக்கிறது. இருப்பினும் நான் அதைரியப்படவில்லை. பொதுமக்கள் நிர்ப்பந்தித்தால் பாகிஸ்தான் மந்திரிகள் ஒழுக்கமடைவார்கள் என்றும் இஸ்லாமிய போதனைகளை அனுஷ்டிப்பார்கள் என்றும் நம்புகிறேன்.

தேர்தல் சமயத்தில் பொதுமக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற இந்த மந்திரிகள், கவர்னர்களால், முடியாவிட்டால் பதவிகளை விட்டு விலகும்படி அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுவார்கள். சகல துறைகளிலும் அவர்களைவிட சிறந்தவர்கள் அவர்களுக்கு பதிலாக அமர்த்தப்படுவர். மேல்நாட்டு நாகரீகம், பழக்கவழக்கங்களை விட்டு, மானிட முன்னேற்றத்திற்கு உத்திரவாதமளிக்க இஸ்லாமிய போதனைகள்தான் உறுதி அளிக்கமுடியும் என்று உணர அவர்களுக்கு இது நல்ல சந்தர்ப்பமாகும்."

எமது லட்சியம்

—(o)—

பாரததேசத்தின் நெருக்கடியான கட்டத்தில் "ஆஸாத்" தோன்றுகிறது. அன்னிய ஆட்சி இந்நாட்டைவிட்டு அகன்றுவிட்டது. ஆனால், இனிதான் நம் ஆட்சியின் மாளிகையை நாமே நிர்மாணித்தாகவேண்டும். 1947-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15-ந் தேதி நாம் அடைந்தது சுயராஜ்யமன்று; நம்முடைய சுயராஜ்யத்தை நாமே நிர்மாணித்துக்கொள்வதற்குரிய சுதந்திரமே, இச் சுதந்திரத்தை நாம் இன்று பயன்படுத்திக்கொள்ளும் முறையைப் பொறுத்திருக்கிறது, நம்முடைய எதிர்காலம் நம் நாட்டினுடைய அந்தஸ்து; உலகத்தின் அமைதி! ஆகையால், ஆங்கிலேயர் விட்டுச்சென்ற நம்முடைய நிலத்திலே நாம் எதை விதைக்கப் போகின்றோம் என்பதை நாம் உடனே நிச்சயித்துக்கொள்ள வேண்டும்; ஏனெனில், சுரையொன்று போட்டால் விரையொன்று முளைக்காது.

மகாத்மா காந்தியின் தலைமையின்கீழ் இந்நாடு நடத்திய சுதந்திரப்போர் அற்புதமானது; உலக சரித்திரத்திலேயே ஒப்புயர்வற்றது. இதற்குக் காரணங்கள் இரண்டு: ஒன்று, மகாத்மா கையாண்ட அஹிம்ஸா தர்மம்; இரண்டு, இந்தியாவின் சுதந்திரப் போராட்டம் உலக மக்களின் சுதந்திரப்போராட்டத்துக்கு சின்னமாக விளங்கியது. இப்பெரும்பேற்றை சுதந்திர இந்தியா கைவிடமுடியாது. உலக அமைதியின் பாதுகாப்பாளனாக இந்தியா வாழவேண்டும்; இந்திய மக்களின் வாழ்க்கை முறை உலக மக்களின் லக்ஷிய வாழ்க்கையின் சின்னமாக அமையவேண்டும். நியாயத்துக்கும் சத்தியத்துக்கும் பிரதிநிதியாக சர்வதேச அரங்கத்தில் இந்தியா விளங்கவேண்டும். இந்த லக்ஷியத்தையடைவதற்கு இன்றே அடிகோலியாகவேண்டும்.

சென்ற சில மாதங்களாக வடநாட்டில் பாக்கிஸ்தானிலும் இந்தியாவிலும் நடந்த சம்பவங்கள் கடவுள் சிருஷ்டியையே அவமதிப்பவையாகும்; தேசத்தைக் காட்டிக் கொடுப்பவை; மனித இயற்கையின்மேலுள்ள நம்பிக்கையே குலைக்கக்கூடியவையாகும், அவைகள் இன்று கடந்த காலத்தைச் சார்ந்தவை என்று நம்புவோமாக. நம்முடைய சுதந்திர வாழ்வின் ஆரம்பத்துக்கு அவை நல்ல அறிகுறிகள் அல்ல. ஆனால் அவைகள் நம்முடைய உறுதியையும் நம்பிக்கையையும் பலப்படுத்தவேண்டுமேயன்றி தளரச் செய்யக்கூடாது. ஆகையால், பாக்கிஸ்தானில் முஸ்லிம்கள் மாத்திரமும், இந்திய டொமினியனில் ஹிந்துக்கள் மாத்திரமுமே வாழவேண்டுமென்று கூறினவர்கள் வகுப்புக் கலவரத்தின் அதிர்ச்சியிலே, சிந்திக்கும் சக்தியை இழந்துவிட்டவர்களில் ஒரு சிலர் என்று கொள்வோமாக. ஜனாப் ஜின்னா இட்ட தீ முஸ்லிம்களை மாத்திரம் பாதிக்கவில்லை; ஹிந்துக்களையும் சீக்கியர்களையும் அது சுட்டிருக்கிறது. இந்நாட்டு மக்களில் பெரும்பாலோர் வகுப்பு வாதமென்ற கரியுடன் காட்சியளித்தனர். முஸ்லிம் லீக் கக்கிய விஷம் இந்திய மக்களின் வாழ்க்கையின் ஒரு அம்சத்தையும் பாக்கி வைக்கவில்லை. நெருப்பை நீர் விட்டுத் தணித்தாக வேண்டும்; விஷத்தை கண்டத்தில் அடக்கியாக வேண்டும்.

எனவே, நவஇந்தியாவின் சமுதாய வாழ்க்கை பரிபூரண ஜனநாயகத்தின் அடிப்படையின்மேல் அமையவேண்டும். அரசியல் துறையில் ஜனநாயகம்; பொருளாதாரத் துறையில் ஜனநாயகம்; சமூகத்துறையில் ஜனநாயகம்.

மதத்தின் காரணமாகவோ, கொள்கையின் காரணமாகவோ, வகுப்பின் காரணமாகவோ, ஒரு இந்தியனுக்கும் மற்றொரு இந்தியனுக்கும் இடையே அரசியல் உரிமைகள், அந்தஸ்து, பொது வாழ்க்கையில் பங்கு, நிர்வாகத்தில் இடம் மாறுபடக்கூடாது. தனி மனிதன்தான் அரசாங்கத்தின் அடிப்படையான அங்கம் அவனுடைய மதத்துக்கும், வகுப்புக்கும், கட்சிக்கும், அரசாங்கத்துக்கும் அவனுக்குமிடையிலுள்ள உறவு சம்பந்தப்பட்ட வரையில் அணுவும் இடமிருக்கக்கூடாது.

ஒவ்வொருவனும் தன்னுடைய உழைப்பின் பலனைப் பி[illegible] அபகரிக்காமல் தானே அனுபவிக்கும் உரிமை பெற்றவனாக இ[illegible] வேண்டும். ஒருவன் தன் உழைப்பினால், சம உழைப்பினால் ம[illegible]ற்றொருவன் பெறுவதைவிட அதிகமாகப்பெறும் நிலையிலிருக்க[illegible] கூடாது. ஒவ்வொருவனுடைய உழைப்புச் சக்தியும் சமுதாய[illegible]தின் சொத்து. தன் சொத்தைப் பாதுகாப்பது சமுதாய[illegible] பொறுப்பு. ஒவ்வொருவனுடைய திறமையும் பூரணமாக வ[illegible]தற்கு வேண்டிய சந்தர்ப்பத்தை அளிப்பது சமுதாயத்தின் பி[illegible] நிதியாகிய சர்க்காரின் கடமை.

பிறப்பின் காரணமாகக் கற்பிக்கப்படும் உயர்வு தாழ்வை சமூகம் ஒழிக்கவேண்டும். திறமையும், ஒழுக்கமுமே தரத்தின் அளவுகோலாக இருக்கவேண்டுமேயன்றி நிறமும் ஜாதியுமல்ல.

இத்தகைய பரிபூரண ஜனநாயகத்தைத்தான் அபேதவாதமும், பொதுவுடைமையும் உருவாக்க விரும்புகின்றன. ஆனால் காந்தீயத்தின் அடிப்படையில் இந்த லக்ஷியத்தை அடைய முற்படுவது பலாத்காரத்தின் அவசியத்தை ஒழிப்பதோடு, மனிதனின் உயர்ந்த அந்தஸ்துக்கு ஒத்ததாகவும் இருக்கிறது.

இந்த லக்ஷியத்தை அடையும் முயற்சியில் தன் பங்கையும் செலுத்துவதற்காகவே 'ஆஸாத்' தோன்றுகிறது.

வகுப்புவாத உணர்ச்சியை நிர்த்தாக்ஷண்யமாக 'ஆஸாத்' கண்டிக்கும்.

முற்கூறிய ஜனநாயகத்துக்கு முரணாகப் போகும், எந்தக் கட்சியையும் சர்க்காரையும், மனிதனையும் 'ஆஸாத்' வன்மையாகக் கண்டிக்கும்.

பல வகுப்பாரிடையே அன்யோன்யம், நம்பிக்கை, அன்பு நிலவுவதற்காக உலக மதங்களின் பெருமையையும், அவைகளின் ஊடே பாயும் ஒர்மையையும், இவைகள் பிறப்பித்த நாகரிகங்களின் சிறப்பையும் வெளிப்படுத்த 'ஆஸாத்' முயலும்.

மக்களின் வாழ்க்கை நிரப்பமாவதற்கு வேண்டிய அனைத்தையும் தன் பக்கங்களின் மூலம் உணர்த்த 'ஆஸாத்' முயற்சிக்கும்.

துண்டாக்கப்பட்ட இந்தியாவை மறுபடியும் ஒன்றாக்குவதற்கு இந்திய டொமினியனில் இந்த லக்ஷிய வாழ்க்கையை நிறுவுவதே சிறந்த வழி என்று 'ஆஸாத்' நம்புகிறது.

இப்பெருங்காரியத்தைச் சாதிக்கக்கூடியவர்கள் நம் ஒப்பற்ற தலைவர்களான மகாத்மா காந்தி, பண்டித ஜவாஹர்லால் நேரு, மௌலானா அபுல்கலாம் ஆஸாத், பாபு ராஜேந்திர பிரஸாத், முதலியவர்களே என்று 'ஆஸாத்' நம்புகிறது. ஆகையால் இப் பெருவீரர்களின் ஒவ்வொரு காரியத்தையும் 'ஆஸாத்' ஆதரித்து நிற்கும்.

இச்சீரிய நோக்கைத் தமிழ்ப்பெருமக்கள் பரிபூரணமாக அங்கீகரிப்பார்களென்ற நம்பிக்கையுடன், அவர்களுடைய ஆதரவைப்பெற தமிழ் மக்களை நாடி "ஆஸாத்" வருகிறது.

பாகிஸ்தானின் நிலைமை என்ன என்பதைப்பற்றிபிரிவினை ஏற்படுவதற்கு முன் பொதுமக்களுக்கு விளக்கி மௌலானா அப்துல்ஹகீம் தமிழ்நாட்டில் செய்த பிரசங்கங்களின் சுருக்கம்:

பாகிஸ்தானின் பொருளாதாரம்:—

பெரியோர்களே ! இந்த உலகத்தில் எந்த ஒரு வேலை யும் அதற்கான காரணங்களின்றி நிகழ்வதில்லை. ஒரு தனிப்பட்ட மனிதனோ, ஒரு சமூகமோ நிர்மாணவேலையை ஆரம்பிக்குமுன்பு அதற்கான பொருளாதார வசதியைப் பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டியது மிக மிக அவசிய மாகும் முதலில் பையில் இருப்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். வெறும் உணர்ச்சிகள் மட்டும் ஒரு பலனையும் கொடுப்பதில்லை. எந்த திட்டமும் பூர்த்தியாவது அதன் பொருளாதார நிலைமையைத்தான் பொருத்து இருக்கிறது. வெறும் உணர்ச்சியைக் கொண்டு பாகிஸ்தானை ஆதரிப் பவனையும், அதேபோல் வெறும் உணர்ச்சியைக்கொண்டு பாகிஸ்தானை எதிர்ப்பவனையும் நாம்எப்பொழுதும் வெறுத்து வந்திருக்கிறோம். பாகிஸ்தான் முஸ்லிம் சமூகத்திற்கு நன்மை பயக்குமென்று இருந்தால் அதை எதிர்ப்பதற்கு யாதொரு காரணமுமில்லை. அல்லது பாக்கிஸ்தான் பொது வாக இந்தியாவையும் குறிப்பாக முஸ்லிம் சமூகத்தையும் சர்வநாசத்தில் ஆழ்த்திவிடும் என்று தெரிந்தும் கட்சிக்காக அதன்வலையில் அகப்பட்டு அதை ஆதரிப்பவர்களை என்ன வென்றுசொல்லுவது. ஒரு வேலையை ஆரம்பிப்பதற்கு முன் அதனுடைய நன்மை தீமைகளை ஆராய்ந்து பார்க்க வேண்டியது அவசியம் என்பதை நான் சொல்ல வேண் டியதில்லை. ஒரு சிறிய வியாபாரத்தையோ அல்லது ஒரு சிறிய குடிசையையோ கட்டுவதற்கு முன்புகூட அதற்கு தேவையான பொருளாதாரத்தைப் பரிசீலித்துப் பார்க் கிறோம். அப்படியிருக்க பத்துகோடி முஸ்லிம்களுடைய கௌரவ வாழ்வுக்கென்று தீர்மானிக்கப்படும், பாக்கிஸ் தானின் பொருளாதாரத்தைப் பற்றி யாதொரு முன் யோசனையுமின்றிஎப்படி ஒப்புக்கொள்வது ?

வாருங்கள் ! அல்லாவுக்காக, தெய்வத்துக்காக சீர் தூக்கிப் பார்ப்போம். பாகிஸ்தான் மகாணங்களின் மொத்த வருமானம் 21-கோடியே 37-லக்ஷமாகும். இந்த வருமானமும் 1942-வருஷ யுத்தகால வருமானமாகும்.

பஞ்சாப்	14-கோடியே		49-லக்ஷத்து		18-ஆயிரம்	ரூ.
எல்லைமாகாணம்,	1	,,	96	,,	54	,
ஸிந்து,	4	,,	80	,,	74	,,
பலூசிஸ்தான்			10	,,	10	,,

பாகிஸ்தானின் ஓர் பெரிய அங்கமாகிய வடமேற் கின் நான்கு மகாணங்களின் வருமானம் 21-கோடியே 37-லக்ஷமாகும். இது யுத்தகால அதிக வருமானமாகும். ஏனெனில் இன்று $14\frac{1}{2}$-கோடி ரூபாய் வருமானமுள்ள பஞ்சாப் மாகாணம் 1938-ம் வருஷ பட்ஜட்படி 10 கோடியே 90 லக்ஷமாக இருந்தது. அதன்படி யுத்தத் திற்கு முன் பாகிஸ்தான் பிரதேசத்தின் வருமானம் 16 கோடியே சொச்ச லக்ஷமாகும் இந்த வருமானத்தில் சிறிது எல்லைப்புற மகாணங்களின் நிர்மாணத்திற்கு உதவி யாக மத்திய அரசாங்கத்தாரால் கொடுக்கப்படும் 2 கோடியே 5-லக்ஷ ரூபாயும் சேர்க்கப்பட்டிருக்கிறது. அந்த உதவி நிதியையும் நீக்கிவிட்டால் இன்னும் இரண்டு கோடி ரூபாய் குறைந்துவிடும் இத்தியாவை இரண்டா கப்பிரித்து ஹிந்துக்களுடைய தாயகத்தில் முஸ்லிம்களுக்கு யாதொரு பாத்தியமுமில்லை என்று விலக்கிவிடும் மாகாணங்களில் ஒன்றாகிய பம்பாய் மாகாணத்தின் வரு மானம் 35-கோடி ரூபாய்கள் என்றால் இது கௌரவம் பொருந்திய முஸ்லிம் சமூகத்திற்கு உகந்ததாய் இருக்க முடியுமா என்று உங்கள் மனதை கேட்டு அறிந்து கொள் ளுங்கள். நம்மை அடிமைப்படுத்தி 200-ஆண்டுகளாக நம் நாட்டை கொள்ளையிட்ட வெள்ளையர்கள் யுத்தகாலத் திற்கு முன் குடித்த சாராயத்தின் கிறயம் 19-கோடி பவு ணாகும். யுத்தகாலத்திலோ அது 55-கோடி பவுன்களாக் ஆயிற்று.

மேலும் அவர்கள் யுத்தகாலத்திற்கு முன்பு புகைத்த சிகரெட்டின் மதிப்பு 14-கோடி பவுன்கள் என்றால் யுத்த காலத்தில் குடித்த சிகரெட்டின் மதிப்பு 35-கோடி பவுன் களாகும். அந்தோ பரிதாபமே. கம்பீரமாக வாழ்ந்து வந்த ஒரு சமூகத்தின் பெயரால் அடைய முயற்சிக்கும் பிரதேசத்தின் வருமானம் அவர்களை ஆக்ரமித்து கொள்ளை கொண்டுபோனவர்களுடைய சிகரெட் செலவில் ஓர் சிறிய அளவென்றால் ஒரு இந்தியன் என்ற முறையிலோ ஓர் முஸ்லிம் என்ற முறையிலோ இந்த அகௌரவத்தை நாம் எப்படி பொருத்துக்கொள்ளமுடியும் ! மேலும் இந்த வரு மானமும் பாகிஸதானுக்கு முழுதும் கிடைக்காது, இந் தியா பிறிக்கப்பட்டால் பெரிய மாகாணமாகிய பஞ்சாப் இரண்டாக பிரிந்தே தீரும். ஏனெனில் லாகூருக்கு மேற்கே முஸ்லிம்மெஜாரிடி பிரதேசம் என்றால் லாகூருக் குக் கிழக்கே 13-ஜில்லாக்களில் முஸ்லிம்கள் மைனாரிடியாக இருக்கிறார்கள் முஸ்லிம் மைனாரிடி பிரதேசமான இந்த 13 ஜில்லாக்கள்தான் பஞ்சாப் மாகாணத்திலேயே வளம் பொருந்திய, வியாபார, தொழில் பிரதேசமாகும். பூரா பஞ்சாபுக்கு வெளிச்சத்தைக்கொடுக்கும் ஹைட்ரோ எலக் ட்ரிக் டிபார்ட்மெண்ட் இதில் வந்துவிடுகிறது ஆதலால் பஞ்சாப் மகாணத்தின் பெரிய வருமானம் பாகிஸ்தானி லிருந்து குறைந்துவிடுகிறது.

பத்துகோடி முஸ்லிம்களுக்கு மிஸ்டர் ஜின்னாதான் தலைவர் என்று எண்ணி கண்மூடித்தனமாக முஸ்லிம்களுக் கான சர்வ நாசத்தை நாம் எப்படி ஏற்கமுடியும்! ஏனெனில் ரூபாய் 21-கோடியைக்கொண்டு பாகிஸ்தான் பிரதேசங்களை வெள்ளையர்கள் உதவியின்றி நிர்வகிக்க

முடியாது. ஒருதேச நிர்வாகத்தில் பாதுகாப்பு செலவு தான் இன்று முதல்கட்டத்தை அடைந்திருக்கிறது. பாகிஸ்தானின் வடமேற்கு எல்லை கைபரிலிருந்து ஈரான் வரை பரவி இருக்கின்றது. அந்த எல்லையில் பல கணவாய்கள் இருப்பினும், கைபர், போலந்த் என்ற இரண்டு கணவாய்களுக்குமட்டும் சமாதான காலத்திற்கு 35-கோடி ரூபாய் செலவாகிக்கொண்டிருந்தது. யுத்தகாலத்திலோ அதற்கு 400-கோடி ரூபா ஆயிற்று. அங்கு ரஷிய எல்லை சமீபத்தில் இருப்பதால் பலமான பாதுகாப்புகள் அவசியமென்று ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

ஷ எல்லையை ஒரு லக்ஷத்து 60-ஆயிரம் கருப்பர்கள் 60-ஆயிரம் வெள்ளையர்களுடையபடைகள் எப்பொழுதும் பாதுகாத்துவந்தன. 21-கோடி வருமானமுடைய ஒரு பிரதேசத்தின் ஒரு எல்லையின் பாதுகாப்பு செலவுமாத்திரம் 400.கோடி ரூபாய் என்றால் (யுத்தத்திற்கு முன் வருமானம் 16.கோடி பாதுகாப்பு செலவு 35-கோடி) எப்படி ஒத்துக்கொள்வது ஒன்றுமறியாத பாமர முஸ்லிம்களை மதத்தின் பெயரால் வெள்ளையர்கள் தங்களுக்கு சாதகமாக உபயோகிக்க முயற்சிக்கிறார்கள். முஸ்லிம்லீக் தலைவர்களோ எப்பொழுதும் இந்தவிஷயங்களை ஆராய்ந்துபார்த்ததில்லை. இத்த கேள்விகளுக்கு பிரிவினை என்ற புத்தகத்தில் 31-வது பக்கத்தில் பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அன்னியநாட்டு சாமான்களை பாகிஸ்தானில் இறக்குமதி செய்து சுங்கவருமானத்தை அதிகரித்துக் கொள்வோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எவ்வளவு முன்யோஜனையானதிட்டம். பாமரமுஸ்லிம் மக்களின் 10கோடி ரூபாய்களை ஐரோப்பாவிற்கு அனுப்பிவிட்டு தான் 10லக்ஷ ரூபாய் சுங்க வருமானத்தை பெறலாமென்பதை அவர்கள் மறந்துவிடுகிறார்கள். பாகிஸ்தான் தொழில்களை நாசம் செய்து அதை ஐரோப்பாவிற்கு மார்க்கெட்டாக உபயோகிக்க விடலாமென்பது பிரதிபலிக்கவில்லையா ?

1938 ஸ்ரீ மே-மீ 25உ லாங்கஷையரின் ஒரு தூது கோஷ்டி லீக் தலைவர், ஸர் அப்துல்லா ஹாரூனை சிம்லாவில் சந்தித்து இந்தியாவில் தங்களுடைய இரக்குமதி 50 சதம் குறைந்துவிட்டது என்று சொல்லி இறக்குமதியை அதிகரிக்க உதவிசெய்யும்படி கேட்டுக்கொண்டார்கள். சில லக்ஷ ரூபாய்களுக்கு பஞ்சை அனுப்பிவிட்டு சுகமாக 40-கோடி கெஜம் துணிகளை இரக்குமதி செய்துகொள்ள அறிவிலிகளான இந்த இந்தியநெசவாளப் பிரதிநிதிகள்சம்மதிக்கவில்லையே என்று ஷ லீக் தலைவர் வருந்தினர். ஆதலால் பத்துகோடி முஸ்லிம்களுக்கு லீக்தான் ஸ்தாபனம் அதற்கு நானே பிரதிநிதி என்கிற லேபிளை வைத்துக்கொண்டு பாமர முஸ்லிம்களை ஏமாற்றி சர்வ நாசப் படுகுழியில் தள்ள கொண்டுபோக நானே அல்லது முஸ்லிம் ஸ்தாபனமாகிய ஜமீயத் உலாமாவோ, இந்திய சமுதாயத்தின் கௌரவத்திற்காக பாடுபட்டுவரும்.

தேசீய காங்கிரஸ் மகாசபையோ எப்படி சம்மதிப்பது. பாகிஸ்தான் பிரிவினை ஏற்பட்டால் வடமேற்கு எல்லை மாத்திரம் அல்ல வட கிழக்கிலு... ஹிமயமலையிலிருந்து கச் கத்தியவார் சமுத்திரம் வரை 1200-மைல் எல்லையைப் பாதுகாப்பதற்கு வருமானமெங்கிருந்துவரும். இந்த எல்லையில் இயற்கையான மலைகளுங் கிடையாது. லெனின்கிருட் ஆயிரமைல் எல்லையை 40-லக்ஷ ஜெர்மன் வாலிபர்கள் கணக்கற்ற ஜெர்மன் மக்களுடைய செல்வத்தை பலிகொடுத்தும் காக்கமுடியாமல் ஜெர்மனி உலகத்திலிருந்தே மறைந்துவிட்டதென்றால் பாகிஸ்தான் எப்படி தன்னை பாதுகாத்துக்கொள்ளுமென்பதை எண்ணிப் பார்க்கும்படி உங்களை கேட்டுக்கொள்ளுகிறேன்,

இன்று நவீன உலகத்தில் ஜப்பான் வீழ்ச்சிக்கு பிறகு பூரு ஆசியாவுக்கும் இந்தியாதான் தலைமைவகிக்கப் போகிறது. இந்தியாவின் செல்வம், தொழில், விவசாய முதலியவை உலகத்தின்முன்னணியில் இருக்கப்போ... திண்ணம். வருங்கால சுதந்திர ஜனநாயக ஐக்கிய இந்தி...வில் நமக்கும் ஒரு கௌரவமான பங்கு உண்டு. வசதியற்ற அன்னியருடைய தயவை நாடி வாழும் தேசத்தை, விட ஒன்றுபட்ட இந்தியாவில் நமதுகௌரவமான பங்கை அடைந்து வாழ்வதே சிறந்ததாகும்.

இந்தியா சுதந்திரம் அடைந்த 10-வருஷத்தில் அமெரிக்கா, இங்கிலாந்து, இவைகளைவிட உலகத்தில் முதன்மை ஸ்தானம் வகிக்கப்போகிறது ஆகலால் சுதந்திர இந்தியாவின் நிர்வாகத்தில் சரி சமமான பங்கெடுத்துக்கொள்ளும்படி மீண்டும் உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

பாகிஸ்தான் முஸ்லிம்களுக்கு லீக் பத்திரிகை "இன்கிலாப்" பின் எச்சரிக்கை,

——(o)——

"இஸ்லாமிய ராஜ்யத்தை அமைக்கும்படி உங்களை ஆளுபவர்களிடம் நீங்கள் கேட்பது நமக்கு(இந்திய முஸல்மான்களுக்கு) அழிவையும், நாசத்தையுமே தேடுவதாய் இருக்கிறது. ஆனால் நீங்களே முதலில் (உண்மை) முஸ்லிம்களாக இருக்கமறக்கவும் செய்கிறீர்கள். இங்கு குர் ஆன் ஆட்சிமட்டிலும் இன்று இருந்திருக்கும்பக்ஷத்தில் திருட்டுக்குற்றத்திற்காக கைகள் துண்டிக்கப்படாதவர்கள் உங்களில் எத்தனை பேர் இருந்திருக்க முடியும்? விபசாரம் லஞ்சம், மதுபானம் போன்ற குற்றங்களுக்காக சிறையில் கிடந்து நாருதவர்கள் உங்களில் எத்தனைநபர்கள் இருந்திருப்பார்கள் ?"

பாகிஸ்தானிகளின் நடத்தை எந்த அளவு சீர்கெட்டுவருகிறதென்பது "இன்கிலாப்" பின் அழுகையிலிருந்து தெரியவருகின்றது. இதை நிச்சயித்துக்கொள்ள விரும்புகிறவர்கள் ராவல்பிண்டி, ஜீலம், நவ்ஷேரா, சியால்கோட்டிலுள்ள தங்கள் பந்துக்களிடம் போய்வந்தவர்களையும் அதிலும் முட்டாள்தனமாக தங்கள் பெண்களையும், சகோதரிகளையும் கூடஅழைத்துச்சென்று பஞ்சாபிய காட்டுமிராண்டிகளால் தங்கள் மானத்திற்கு எந்த நிமிஷமும் ஏற்படக்கூடிய அபாயத்தில் இருந்து திரும்பியவர்களை விசாரித்தால் உண்மை தெரியும்.

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

கடமையை செய்தோம்.

படகு புயலில் சிக்கித் தவிக்கும் சந்தர்ப்பத்தில் ...த்திசொல்ல முன்வந்திருப்பவர்கள் அன்றே இந்த உண் ...மகளை நமக்கு எடுத்துச்சொல்ல ஏன் முன்வந்திருக்கக் ...ாது என்று சில நண்பர்கள் குறைகூறுகின்றனர் ...ந்த எட்டு வருஷங்களாக "பாகிஸ்தான் ஒரு அனர்த் ..." என்று நாம் பகிரங்கமாய் சொல்லிவந்துள்ளோம். ...ப முஸல்மான்களுக்கும் சரி பாகிஸ்தானிகளுக்கும் ...நன்மையில்லையென்று பட்டவர்த்தனமாகப் பேசிவந் ...திருக்கிறோம். "பாகிஸ்தான் ஜிந்தாபாத்" கோஷம் இந் ...ஸல்மான்களின் மரண ஸாஸனமென்றும் முடிவில் ...் அந்தரத்தில் தொங்க நேரிடும் என்றும் சந்தேகத் ...மின்றி எடுத்துச்சொன்னோம். முஸ்லிம்களின் ...தசிய பத்திரிகைகளான மதீனா, ஹிந்த், ஜம்ஜம், ஹிர்ரியத், அன்ஸாரி, ஹகீகத், பயாம், ஸீல்கர்னைன், அஸ்பஷீர், ஹிலால், நயீஜிந்தகீ, தன்வீர் போன்ற இன்னும் பல பத்திரிகைகள் தொடர்ந்து எச்சரித்தும் வந்தன. ஆயினும் மிஸ்டர் ஜின்னா வைக் காயிதே ஆஜமாகக் கொண்டவர்கள் சுய அறிவைக் கொண்டு சிந்திக்க அவகாசம் இல்லாமல் போய்விட்டது முஸ்லிம் சமூகத்தின் துரதிர்ஷ்டமேயாகும்.

1946-மார்ச்சு வெளியீட்டில் "நயீ ஜிந்தகீ" கீழ்வருமாறு முஸ்லிம்களை எச்சரித்திருக்கிறது இங்கு குறிப்பிட வேண்டியதவசியம்.

"முஸ்லிம்களின் ஒத்துழைப்பின்றி இந்தியா சுதந்திரமடையும் நாள் முஸ்லிம்களுக்கு ஒரு படிப்பினை நாளாகத்தான் இருக்கும். அதைவிட முஸ்லிம்களின் எதிர்ப்புக்கிடையே வரும் இந்திய சுதந்திர நாள் பின்னும் புத்தி புகட்டக்கூடியதாகவே இருக்கும்."

இன்று பதினெட்டு மாதங்களுக்குப் பிறகு புத்தி புகட்டும் சம்பவங்களைப் பார்க்கிறோம். தேசமும் முஸ்லிம்களின் எதிர்ப்பை சமாளித்து சுதந்திரமும் பெற்றிருக்கிறது.

சாதாரண காங்கிரஸ் தொண்டர்களாகிய நமக்கு அன்றே தெரிந்துவிட்ட உண்மைகள் பெரிய பெரிய லீக் லீடர்களுக்குத் தெரியாமல் இருந்திருக்க முடியாது. அவர்களுக்கும் தெரிந்தே இருக்கவேண்டும். இருந்தும் முஸ்லிம்களை அவர்கள் வேண்டுமென்றே ஏமாற்றிவந்திருக்கின்றனர், இல்லையேல் வரப்போவதை முன்கூட்டி அறிந்துகொள்ளத் திறமையற்ற அரசியல் முட்டாள்களாகத்தான் இருக்கவேண்டும். மோசக்காரர்களாயினும், முட்டாள்களாயினும், எப்படி இருப்பினும் அவர்கள் முஸ்லிம்களின் வழிகாட்டிகளாயிருக்க யோக்கியதை அற்றவர்கள் என்பது நிச்சயம்.

நாலுகோடி முஸ்லிம்கள் எக்கேடுகெட்டாலும் பரவாயில்லை நாம் சொல்லிவந்தது நிறைவேறிவிட்டால் போதும் என்று நினைக்கும் அந்த நீசத்தனம் நம்மிடமில்லை. இன்று முஸ்லிம்கள் நெருக்கடியான காலத்தை எதிர்நோக்கியுள்ளனர். காங்கிரஸ் தலைவர்களைத் தவிற மற்றவர்களுக்கு முஸ்லிம்களின்பேரில் துவேஷம் வளர்ந்துவருகிறது அநேகமாக இந்த நாட்டுமக்கள் முஸ்லிம்கள் இங்கிருப்பதைப் பார்க்கவும் விரும்பவில்லை என்றுகூட சொல்லலாம். முஸ்லிம்களின் போக்கால் அவர்கள் பொருமை இழந்து விட்டனர்! இதனால் ராஜினாமா செய்யப்போவதாக பண்டித நேரு கூட சொல்லவேண்டிவந்தது. இந்திய சூத்திரக் கயிர் பண்டித நேரு கையிலிருந்து ஒரு வகுப்புவாத ஹிந்துவின் கைக்கு மாறும் நாளைநினைக்கவும் மனம் நடுங்குகின்றது முஸ்லிம்களுக்குமட்டுமின்றி இந்தியாவின் அழிவிற்கு அடிகோலும் நாளாகத்தான் அது இருக்கமுடியும்.

நெருக்கடியான இச்சமயத்தில் ஏகப்பிரதிநிதித்வ ஸ்தாபனத்தைக் காணவில்லை. தேடிப்பிடித்து லீக் தலைவர்களிடம் நிலைமையை விளக்கினால் 'நீங்கள் சொல்லுவது உண்மைதான். ஆனாலும் இங்கு இருக்கவா போகிறோம்! "பாகிஸ்தானுக்குப் போய்விடுவோம்" என்று சாவதானமாக பதிலளிக்கின்றனர். உண்மைதான். நடப்பதுவும் அதுதானே! மக்களை விட்டு தலைவர்கள் ஓடிக்கொண்டிருக்கின்றனர். தங்கள் வார்த்தையை நம்பி ஹிந்து சகோதரர்களை பகைத்துக்கொண்டவர்களை நிராதரவாய் கைவிட்டு மாயமாய் மறைகின்றனர். மூழ்கும் கப்பலிலிருந்து கடைசியாக காப்டன் வெளியேறுவது வழக்கம். ஆனால் மூழ்கிக்கொண்டிருக்கும் முஸ்லிம் லீக் ஓட்டைப்படகில் இருந்து லீக் காப்டன்கள் முதலில் வெளியேறி ஓடுகின்றனர். தாங்கள் தப்பித்தால் போதும்! யார் எப்படிப் போனால் அவர்களுக்கு என்ன!

பரிஹாரம் என்ன ?

"இதெல்லாம் பழய கதைகள். அவைகளைச் சொல்லி என்ன பயன். இன்றுள்ள நிலைமைக்கு பரிகாரமும் இனி நாம் செய்யவேண்டியதும் என்ன?" என்று அனுதாபத்த அன்பர்கள் கேட்டால் அது இயற்கையே யாகும்.

இன்றைய தர்ம சங்கடம் தானாக வந்ததல்ல. நாமே தருவித்துக்கொண்டதேயாகும். பல புதிய சங்கடங்களையும் அது உண்டாக்கியும் வருகிறது. நாமே தேடிக்கொண்ட வியாதிக்கு நம் போக்கை மாற்றிக்கொள்வதைவிட நல்ல பரிகாரம் வேறு என்ன இருக்கமுடியும். நோயாளி சாப்பிட்ட ஆகாரத்தைப் பற்றி டாக்டர் கேட்காமல் இருக்கமுடியாது. நீண்ட நாட்களாக விஷங்கலந்த ஆகாரத்தை உண்டதனால் தேகத்தில் விஷம் பரவியிருந்தால் முதலில் அதை வெளிப்படுத்துவதே டாக்டரின் கடமை. அத்துடன் அந்த ஆகாரத்தையும் விடும்படி யோசனை கூறியே ஆகவேண்டும். கடந்த பத்துவருஷங்களில் மிஸ்டர் ஜின்னாவைப் பின்பற்றி முஸ்லிம்கள் கையாண்டுவந்த முறைகளை மட்டுமே கைவிடுவதால் 50-சதவிகித கஷ்டங்கள் உடனே அகன்றுவிட முடியும் என்பது நம் முடிவு.

முஸ்லிம்கள் வகுப்புவாதத்தை ஆழமான குழி ஒன்றை தோண்டி புதைத்துவிட்டு தனிசமுதாயக் கொள்கைக்கு ஒரு முழுக்குப்போடவேண்டும். அதன்பிறகு தலைக்கு ஏறிய முஸ்லிம் லீக், பாகிஸ்தான் பித்தம் தானே இறங்கிவிடும், உண்மையான தேச விசுவாசம் தாய்நாட்டுப்பற்று என்ற பலம் தாளுகவே பெருகிவளர ஆரம்பித்துவிடும். அது முஸ்லிம்களின் வாழ்விற்கும் முன்னேற்றத்திற்கும் உத்திரவாதமளிக்க முடியும்.

நாற்பது வருஷங்களாய் லீக்தலைவர்கள் தனி சமுதாய மனப்பான்மையை வளர்த்து முஸ்லிம்களை தேசீய சக்தியிலிருந்து ஒதுக்கியே வைத்திருந்தனர். முஸ்லிம்சமூகம் ஜன நாயக அரசியல் போக்கிலிருந்தும் விலகியே இருந்து வந்திருக்கிறது. இவ்விதம் முஸ்லிம்கள், முஸ்லீமல்லாதார் இருவரின் அரசியல்லக்ஷியங்கள் தனித்தனி வழிகளில் பிரிந்து சென்றுகொண்டிருந்தன. இருவரும் இரண்டுதுருவங்களை நோக்கி நடந்தனர். என்றே சொல்லவேண்டும். முடிவில் இந்தியா பூராவையும் விட்டு ஒரு மூலையில் முஸ்லிம்கள் கூடாரங்களை அமைத்தனர்.

வெள்ளையரின் பிரித்தாளும் கொள்கை ஹிந்து, முஸ்லிம்களை இரண்டாகப்பிரித்துவிட்டது பிறகு இருவருக்குமிடையே விரோதத்தை வளர்த்து சண்டை மூட்டப்பட்டது. கடைசி நேரத்தில் ஒருவரை இன்னொருவரிடம் ஒப்படைத்துவிட்டு வெளியேறியும் விட்டார்கள்.

இந்நிலையில் இந்திய முஸல்மான்கள் தாங்கள் எதிரியிடம் சிக்கிக்கொண்டதாக நினைப்பது இயற்கையே. இதேபோல் நாற்பது வருஷங்களாய் எதிர்த்துவந்தவர்கள் நம் கையில் அகப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். என்று ஹிந்துக்கள் நினைத்தால் அதுவும் இயற்கைதான். இரண்டு சமூகங்களும் ஒன்றுக்கொன்று நேர்மாரான சூழ்நிலைகளில் வளர்ச்சியடைந்ததுதான் இதற்குக்காரணம்.

ஸர் சையத் அஹமத்கான் முஸல்மான்களுக்காக என்று அலிகார் சர்வகலாசாலைக்கு அஸ்திவாரம் போட்ட அன்றைக்கே முஸ்லிம்களின் அழிவிற்கும் அடிகோலியாகிவிட்டது. அன்றிலிருந்தே தனி நோக்கங்களுடன், தனி லக்ஷியங்களுடன், முஸ்லிம்கள் தேசிய சக்தியிலிருந்து ஒதுங்கி நின்றனர்.

குறுகிய மனப்பான்மையுள்ள வகுப்புவாதக் கூண்டிலிருந்து முஸ்லிம்கள் வெளியேறி இந்தியா பூராகினும் கவனத்தை செலுத்தக்கூடிய பரந்த மனப்பான்மை கொள்ளவேண்டும். இந்தநாட்டை தங்கள் நாடென்றும் மக்கள் அனைவரும் சகோதரர்கள் என்றும் பாவித்து தேச வேலைகளில் பங்கெடுக்க முன்வரவேண்டும். உண்மையான மனதுடனும், அந்தரங்க சுத்தியுடனும், மனமாறுதல் ஏற்படவேண்டியது அவசியம். வேறு வழி இல்லையே என்று நிர்ப்பந்தத்தினல் அல்ல. உண்மையும் நியாயமும் இதுவேயாகும். லீக் தலைவர்கள் சிலர் போடும் வெளி வேஷத்தால் இன்னும் பயங்கரமான விளைவுகளே ஏற்பட ஏதுவாகும்.

அரசியல் கொள்கை எது ?

இன்று நம் எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்திருப்பது "இனி முஸ்லிம்கள் என்ன செய்யவேண்டும்" என்ற விஷயமே. இதைப்பற்றி பலவித அபிப்பிராயங்கள் வெளிவந்துள்ளன. முஸ்லிம்களை தனியாக வைத்தும்பேசும்போது தனி மனப்பான்மை அதில் தொனிக்கத்தான்செய்கின்றது. அதன் விளைவுகளும் லீகர்களின் தனி சமுதாய கொள்கையின் விளைவுகளுக்கும் அதிக வித்தியாசம் இருக்க முடியாது. எனவே "இனி முஸ்லிம்கள் என்ன செய்ய வேண்டும்" என்பதற்கு பதிலாக "இனி இந்தியா என்ன செய்ய வேண்டும்" என்பதில் நம் கவனத்தை திருப்ப வேண்டும். இந்த நாட்டுமக்கள் இந்தியாவின் முன்னேற்றத்திற்காக செய்வதையே நாமும் செய்ய வேண்டும். அவர்கள் கிழக்குநோக்கிச்செல்ல நாம் மேற்கில் கவனத்தைச் செலுத்தினல் பழய சேற்றில் திரும்பவும் சிக்கிக்கொள்ளவே நேரிடும்.

இந்தியாவில் வாழும் ஹிந்துக்கள், கிருஸ்துவர்கள், சீக்கியர்கள், பார்ஸிகள் முதலியோரின் லட்சியமே நம் லட்சியம். ஐக்கிய இந்திய சமுதாயத்தை சிருஷ்டித்து. ஜனநாயக அடிப்படையில் ஆட்சியை நிருவி, முற்போக்குள்ள பலம்வாய்ந்த நவ இந்தியாவை நிர்மாணிப்பது ஒன்றே இந்தியர் அனைவரின் லட்சியமாகும். மேற்கூறிய லட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு, நாட்டிலுள்ள இதர கட்சிகளுடன் நம் தொடர்பு எத்தகையதாய் இருக்கவேண்டும் என்று நாம் முடிவுசெய்ய வேண்டும்.

இன்று பல கட்சிகள் இருக்கின்றன. காங்கிரஸ், ஸோஷியலிஸ்டு, கம்யூனிஸ்டு, ஹிந்துமகாஸபை, ராஷ்ட்ரீய சுயம் சேவக்சங்கம், திராவிடம், முஸ்லிம்லீக் முதலியன. நிதான புத்திபுடன் நாம் இக்கட்சிகளை சீர்தூக்கிப்பார்த்தாகவேண்டும் சகல சமூகத்தினருக்கும் நியாயம் வழங்கி நாட்டை முன்னேற்றவல்ல கட்சி எது என்றும் எந்தக் கட்சிகளால் நாட்டிற்கும் மக்களுக்கும் தீங்கு ஏற்படக்கூடும் என்றும் நாம் முடிவு செய்தாகவேண்டும். இத்துரையில் முதலாவதாக நாம் லீக்கை என்னசெய்யவேண்டும் என்று தீர்மானித்துவிடுவது நலமாய் இருக்கும். நம்மைப்பொருத்தவரையில் கீழ்வரும் காரணங்களால் லீக் உடனே கலைக்கப்படவேண்டும். என்பதுதான் நம்முடிவு.

(5-ம் பக்கம் பார்க்க)

வாசகர்களுக்கு

"ஆஸாத்" மலரின் முதல் இதழ் அவசரத்தில் வெளியாகியுள்ளது. அடுத்துவரும் இதழ்களில், கட்டுரைகள், கதைகளுடன் நற்சுவையுள்ளதாக இருக்கும் என்று உறுதி அளிக்கிறோம்.

மானேஜர்
"ஆஸாத்"

பாகிஸ்தான் இஸ்லாமிய ஆட்சி என்று சொல்ல வேண்டாம்.

லஞ்சம் ஊழல் நிறைந்தது கலீபா ஆட்சி அல்ல லீக் கவுன்ஸில் மெம்பர் ஜமால் மியான் வற்புறுத்தல்.

அகில இந்திய முஸ்லிம் லீக் கவுன்ஸில் கூட்டம் கடைசி டவையாக டிஸம்பர் 14, 15 தேதிகளில் கூடிற்று. சரியாக த்தேமுக்காலுக்கு கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. கருப்புநிற அங் யும் கருப்புநிறமுள்ள ஜின்னா தொப்பிஅணிந்து மிஸ்டர் ஜின்னா க்கின் ஹாலுக்குள் 11-மணிக்கு பிரவேசித்தார் உடனே கள் மூடப்பட்டன. கூட்டத்திற்கு 300-பேர் வந்திருந்தன ன்றும் உண்மையான மெம்பர்கள் அதில் 150 பேரே என்றும் பாக்கி 150 பேரும், முற்போக்கு நோக்கமுள்ளவர்கள். எதிர்த்து ஓட்டுக்கு விடவேண்டிய அவசியம் ஏற்பட்டால், கைதூக்குவதற்காக கொண்டுவரப்பட்டவர்கள் என்றும் நம்பகமாகத் தெரிய வருகிறது.

மனமுடைந்திருந்த இந்திய லீக் மெம்பர்களை உற்சாகப்படுத்தும் நோக்கத்துடன் "மைனாரிடி முஸ்லிம்கள் போராடாமல் இருந்திருந்தால் பாகிஸ்தான் ஏற்பட்டிருக்கவே முடியாது" என்று மிஸ்டர் ஜின்னா சொல்லுகையில், ஒருஅங்கத்தினர்" இந்திய யூனியன் எங்கள் விசுவாசத்தை சந்தேகிக்கிறது" என்று குறுக்கிட்டார்.

"கஷ்டங்களை எதிர்த்து நில்லுங்கள் ஆனால் லீக் ஸ்தாபனம் கலைக்கப்படுவதற்கில்லை. கோழைகளாகிவிட வேண்டாம். பாகிஸ்தானை வாங்கிக் கொடுத்தவர்கள் நீங்களேதான்" என்று பதில் அளித்தார் மிஸ்டர் ஜின்னா.

"எங்களுக்காக பாகிஸ்தான் என்ன செய்யப்போகிறது" இன்னொரு மெம்பரின் குரல்.

இந்தியாவில் லீக் நீடிப்பதை இந்திய மெம்பர்கள் விரும்பவில்லை என்பதை உணர்ந்து அவர்களுக்கு உற்சாக மூட்டச்செய்த முயற்சியில் மிஸ்டர் ஜின்னா வெற்றி அடையமுடியவில்லை.

அகில இந்திய லீகை கலைத்துவிட்டு இந்தியா, பாகிஸ்தானுக்கு தனித்தனி லீக் ஸ்தாபனங்களை அமைக்கவேண்டும் என்ற தீர்மானத்தின்மீது நடந்த கடுமையான வாக்கு வாதங்களுக்குப் பிறகு அதை கடைசியில் முடிவுசெய்வதென்றும் அபிப்பிராய பேதம் இல்லாததீர்மானங்களை முதலில் கவனிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

சர்க்கார் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட்டபோது அதில் கண்டிருந்த "இஸ்லாமிய ராஜ்யம்" என்ற வார்த்தை தீர்மானத்திலிருந்து நீக்கப்படவேண்டும் என்று பாக்கிமஹாலைச் சேர்ந்த ஜமால் மியான் வற்புறுத்தினார் அவர் பேசியதாவது "ஆண்டவனுக்காக உங்கள் ஆட்சியை இஸ்லாமிய ஆட்சி என்று சொல்லிக் கொள்ளவேண்டாம். அதனால் இஸ்லாமுக்கு களங்கம் ஏற்படுகிறது. இஸ்லாமின் பெயரை தவறான வழியில் பிரயோசனப்படுத்திக் கொண்டுவிட்டீர்கள். இனியாகிலும் அம்மாதிரி செய்யாமல் இருக்கும்படி உங்களை வேண்டுகிறேன். உங்களுடைய மந்திரிகளின் போக்கு இஸ்லாமிய ஆட்சியின் நிர்வாகிகளின் போக்கல்ல.

உங்கள் ஆட்சியை இஸ்லாமிய ஆட்சி என்று சொல்லத் துணிவீர்களானால் நம்மதிப்பிற்குரிய கலீபாக்களின் உயரிய குணாதிசயங்களை நாம் உங்களிடம் எதிர்பார்க்கவேண்டியிருக்கும் என்பதை நீங்கள் உணரவேண்டும். அல்லாவின் உண்மை விசுவாசிகளான அவர்களின் ஆடம்பரமற்ற வாழ்க்கையை நீங்கள் நடத்த முடியாது ஆகையால் உங்கள் ஆட்சியில் லஞ்சம், ஊழல் மலிந்துவிட்டது. நீங்கள் ராஜவாழ்க்கை நடத்துகின்றீர்கள். ஏழை மக்கள் உங்களை அணுகுவதற்கில்லை. ஏழைகளை சந்திப்பது நீங்கள் கௌரவக் குறைவாய் மதிக்கின்றீர்கள்" என்று நவாப் ஜாடாவும் இதர மந்திரிகளும் உட்கார்ந்திருந்த திக்கை சுட்டிக் காட்டினார். பிரிவினையால் ஏற்பட்ட விளைவுகளை குறித்து இந்திய முஸல்மான்கள் கண்மூடித்தனமாக மிஸ்டர் ஜின்னாவை பின்பற்றியதற்கு தாம் வருந்துவதாகக் கூறிவிட்டு மேலும் பேசியதாவது "நாம் உங்களை கௌரவத்தின் உச்சஸ்தானத்திற்கு உயர்த்தினோம். உங்களைத் தவிர வேறொருவரின் தலைமையை ஒரு விநாடிக்கேனும் ஏற்க சம்மதிக்கவில்லை, உங்களைப் பின்பற்றுவதன் மூலம் விதியை திருத்தி அமைக்கவும் எதிர்காலத்தை உருவாக்கவும் முடியும் என்று நம்பினோம்,

ஆனால் இன்று நீங்கள் நம்மை அலட்சியம் செய்துவிட்டீர்கள். துன்பப் பிரவாகத்திலே எங்களை விட்டுவிட்டீர்கள். நம் படகு தத்தளித்துக் கொண்டிருக்கிறது. ஆகாயம் பூமி இரண்டிலும் நமக்காக அபாயங்கள் காத்துக் கொண்டிருக்கின்றன. எங்கள் ரத்தத்தாலும் உடைந்த உள்ளத் துணுக்குகளாலும் நீங்கள் நிர்மாணித்துக் கொண்ட பாகிஸ்தானிலுள்ளவர்களுக்காவது அது சுவர்க்கமாக இருக்கமுடியும் என்று இருந்தால் நாம் அழிவதைக் குறித்து நமக்கு அக்கரையில்லை. ஆனால் நிலைமையையும் போக்கையும் பார்த்தால் நம் ஆசை நிறைவேற முடியும் என்று நாம் நம்புதற்கில்லை." ஜமால் மியான் பேசிக் கொண்டிருந்தபோது குழப்பம் ஏற்பட்டதால் கூட்டம் மறுநாள் ஒத்திப்போடப்பட்டது.

பாகிஸ்தான் இஸ்லாமிய ராஜ்யம் என்று எண்ணிக்கொண்டிருக்கும் கள்ளங் கபடமற்ற முஸ்லிம்கள் விழிப்படைய ஜமால் மியானுடைய பேச்சு மிகவும் பிரயோசனமுள்ளதாகும். இனியாகிலும் முஸ்லிம்கள் தவறான நம்பிக்கையில் இருக்காமல் தங்களையே நம்பி தங்கள் நாட்டையும் நாட்டவர்களையும் நம்பி வாழ்வதே நன்மை பயக்கும் என்பதை உணர்ந்து கொள்ளவேண்டிய அவசியமாகும்.

Printed by V. JAYARAM at his Sri Rama Printing Works, 129, East Kadalangudi Street, Kumbakonam. Edited & Published by. MOULANA ABDUL HAKEEM, Kumbakonam.